# தென்மொழி

சோமசுந்தர பாரதியார் நினைவிதழ்



ஆசிரியர்

## பெருஞ்சித்திரனர்

# நமக்கு வந்த மடல்கள்.

**(இம்மடற் பகுதிக்கு எழுதுபவர்கள், தங்கள் கருத்துகளை நீண்ட கட்டுரையாக எழுதாமல் மிகமிகச் சுருக்கமாக எழுதி விடுக்க வேண்டுகின்றோம்.)**

***0:661:*** தமிழ்த்திரு பாவலரேறு ஐயா அவர்களுக்கு, 'தென்மொழி'யினைப் பிறழாமல் படித்துவரும் சேலம் முத்தமிழ்க்கூடல் அன்பர்கள் வணக்கத்துடன் வரையும் மடல். தங்கள் தென்மொழியில் வெளிவரும் மொழிநலம் பேணும் ஆய்வுக் கட்டுரைகள், இன உணர்வை அரும்பவைக்கும் கருத்துப் பெட்டகங்கள், பாநயங்கள் இவற்றைப் பயின்று பயன் பெற்று வருகிறோம் என்பதைத் தங்களுக்கு நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறைவறத் திகழும் தென்மொழி இதழில் தமிழ் அன்பர்களின் பல்வேறு (மொழி, இனம், நாடு, உலகியல்) ஐயங்களுக்கு ஒரு வினு விடைப் பகுதியைப் புதியதாக அமைப்பின் மேலும் தென்மொழி நிறைவு பெறும் என்ற வகையில் அவாவுறுகிறோம். இந்த வகையில் அனைத்துப் பார்ப்பன இதழ்களும் ஒன்றுமறியாத் தமிழர்களின் மனத்தில் கிளைத்தெழும் நயன்மையான ஐயங்களுக்கு அடிப்படையற்ற மாசு படிந்த கருத்துகளை விடையாக இறுத்து அறிவைச் சுழித்து விடுகின்றன. இன உணர்வைப் புராணக் கதைகளைச் செப்பி மழுங்கடிக்கின்றன. சமயப்பற்று என்ற பெயரால் மூடநம்பிக்கை விதைகளை விதைக்கின்றன. வினுவிடைப் பகுதியின் மூலம் அவ்வாசிரியர்கள் நெருங்கியிருந்தே கழுத்தை நெருக்குவது தாங்கள் அறிந்ததே!

இத்தகைய பகுதியை(வினுவிடை)த் தொடங்குவதன் மூலம், 1) அவதூறான கருத்துகள் பரவாமல் மக்களுக்கு நேரடியான தெளிவைக் கொடுக்க முடியும். 2) தென்மொழி அன்பர்களுடன் தாங்கள் மேலும் நெருங்கி உறவாடும் பாங்கு அமையும். 3) இதன் மூலம் தென்மொழி அன்பர்கள் பெருக வாய்ப்பாக அமையும். இத்தகைய ஐயத் தெளிவுப் பகுதியுடன் வெளிவரும் தென்மொழி இதழினை எதிர்பார்க்கும், **சேலம் முத்தமிழ்க்கூடல் அன்பர்கள்** ஈ. உலகவரசன், இலக்கு. அருட்செல்வன், கி. மோகன், மா. செவ்வேள், இல. எழில்பாரி, மா. நடவரசன், பழ. இராசேந்திரன் முதலியோர்.

**0:662:** அன்பினிய பாவலரேறு ஐயா அவர்கட்கு வணக்கம் தாங்கள் நெமலியை நடுவமாகக் கொண்ட **"தென்மொழி பயிலுநர் அவை"**யைத் தொடங்கி வைக்க அருள்கூர்ந்து வருகை தந்தமைக்கும், அத் தொடக்க விழா நிகழ்வினைத் தென்மொழியில் வெளியிட்டமைக்கும் பெரிதும் நன்றிக் கடப்பாடுடையேம்.

கோவை அரங்க. தமிழ்மணி அவர்களின் அறிக்கையின்படி (கும்பம்-மீன மாத இதழில் வந்தது) தென்மொழி இயவத்தில் எம் அவையினை இணைத்துக் கொள்வது தொடர்பாக உம் நெறியுரை தேவைப்படுகின்றது. கோவை இயவம், நெமலி பயிலுநர் அவை

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

# புலமையைக் கீழ்மை செய்வீர்!

இன்றுள புலவர் யார்க்கும்
இலக்கண இலக்கி யங்கள்
ஒன்றினும் தேர்ச்சி யில்லை;
உள்ளுரன் சிறிது மில்லை;
தொன்றுதீந் தமிழில் நல்ல
தோய்வில்லை; புலமை யில்லை;
நன்றெனும் கொள்கை ஒன்றில்
நம்பிக்கை துளியும் இல்லை!

ஒழுங்கிலை; நேர்மை யில்லை;
உண்மைநல் லுணர்வு மில்லை;
மழுங்கிலா ஊக்க மில்லை;
மானமும் மாண்பும் இல்லை;
செழுங்கிளை புரத்தல் இல்லை;
பெரியோரைச் சேர்தல் இல்லை;
அழுங்கிடும் இனத்தைக் காக்கும்
ஆர்வமும் உழைப்பும் இல்லை

பொய்மையும் கரவுங் கொண்டு
புலமையைக் கீழ்மை செய்வார்!
மெய்மையைக் கைநெ கிழ்ப்பார்!
மேலேறக் கால்பி டிப்பார்!
நொய்மைச்சேர் உரைகள் கூறி
நொடிந்திடு வினைகள் மேய்ந்து
தொய்மைகூர் வாழ்க்கை செய்வார்!
தோல்வியை வெற்றி யென்பார்!

அற்றைநாள் புலவர் போல
அளப்பரும் புலமை மிக்கார்
இற்றைநாள் ஒருவ ரேனும்
இல்லெனல் இழிவே ஆகும்!
வெற்றுரை அன்றும், ஈது!
வியன்தமிழ்ப் புலவீர்! நீவிர்
கற்றுரை தமிழை என்றும்
கயமைக்கு விற்றல் நன்றோ?

மண்டுபே ரறிவால் மல்கு
மறைமலை யடிக ளைப்போல்
பண்டித மணிபோல், சோம
சுந்தரப் பாவ லர்போல்
விண்டுசெந் தமிழ்வ ளர்த்த
விறல்மிகு திறமை மிக்கார்
உண்டெனில் அன்றோ நந்தம்
ஒண்டமிழ் வளரும் கண்டீர்!

# தமிழோடு வாழ்கின்ருன்!!

பாப்புலவன் பாரதிக்கு மேலாகப்
பாட்டெழுதி பாரதியென்
ரோர்புலமைப் பட்டம் பெற்ற
நாப்புலவன் சோமசுந் த)ர நாவலன்காண்!
நற்றமிழை நரிப்புலவர்
நடுத்தெருவில் நலிவேற் றுங்கால்,
மீப்புலமைத் தன்மையினுல் மிதித்தெழுந்து
முழங்கியமா மறநெஞ்சன்!
மேன்மைமிகு தமிழ்செய் தொண்டன்!
சாப்புலவன் அல்லனிவன்; சாகாத
தமிழ்காத்த தால்தானும்
சாகாத புகழைப் பெற்ருன்!

புலமைமிகு இந்தியெனும் புரைமொழிசெந்
தமிழ்ப்புலத்தில் பொலபொலெனப்
புலேயர்வழிப் புகுந்த காலே,
வன்மைமிகு அரிமாப்போல் சீர்த்தெழுந்து
வண்டமிழில் முழங்கி, யதன்
வாலறுத்த வாலே நெஞ்சன்!
சொன்மைமிகு செம்புலமைத் திறம்படைத்த
சொல்லாளன்; பொருளாளன்;
சூர்த்தடங்கண் பெருநோக் காளன்!
தொன்மைமிகு இலக்கண நூல் தொல்காப்பி
யம்புகுந்தே உரைகண்ட
தோய்புலமைச் சீர்மை யோனே!

வாய்ப்பிழந்தால் சிலநூறு வரவிழக்கும்
வகையெண்ணி வண்டமிழை
வன்பகைக்கு விலேசெய் கின்ற
நாய்ப்புலவர் வாழ்கின்ற நாளினிலே
நாம்வாழும், நலிவெல்லாம்
நாவலனே நினேயுங் காலேப்
போய்ப்பதுங்கும் பெற்றியனுய் புலமிக்க
போராண்மை வல்லவனுய்
பூந்தமிழைக் காவல் செய்யும்
தாய்புலமை மிக்கவனுய் தறுகணனுய்
தகையாளன் வாழ்ந்திருந்தான்!
தமிழோடு வாழ்கின் ருனே!

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை'' எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!




**சுவடி: 16 ஓலை 1.**

[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]

கடகம் தி. பி. உ௰க௰-
தூலை-ஆக 1979.

# தென்மொழி
இலக்கிய இதழ்

பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரனார்;**

ஆசிரியர்: **மா. பூங்குன்றன்.** அறி.இ; க.மு.

புரப்பாசிரியர்கள்

**தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)**

**தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)**

**கலைக்கோயில் மாணிக்கம் (சிங்கை)**

**தென்மொழி ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)**

**தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்.**

**[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும், பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன']**


## தமிழ் வளர்ச்சிக்குதவாத தவறான வழிகாட்டுதல்கள்!



**திரு.** மா. கோ. இரா.வின் தமிழக அரசு தெரிந்தோ தெரியாமலோ இக்கால் தமிழ் வளர்ச்சியில் அளவிறந்த ஆர்வம் காட்டி வருகிறது. இஃது உண்மையாகக் காட்டும் ஆர்வமோ, அல்லது அரசியல் ஊதியம் பெறவேண்டும் என்ற நிலையில் காட்டும் ஆர்வமோ நாமறியோம். நம்மைப் பொறுத்த வரையில் யார் குத்தி அரிசி யானாலும் நல்லதுதான். ஆனால் நெல்லைத்தான் குத்தவேண்டுமே தவிர, ஆர்வ மிகுதியால், ஏற்கனவே குத்திவைத்த அரிசியையே மீண்டும் உரலிலிட்டுக் குத்தி மாவாக்கி விடக் கூடாது. பெரியார் நூற்றாண்டைச் சாக்காகப் பயன்படுத்திக் கொண்டு, அரசு கொண்டு வந்திருக்கும் எழுத்துச் சீர்திருத்தம் இப்படி அரிசியையே குத்துவது பான்றதே என்பது நம் கருத்து.

தமிழ் மொழியை வளர்க்க விரும்பும் அல்லது சீர்திருத்த விரும்பும் அறிஞரோ அரசோ நான்கு கட்டமாக அதைச் செயற் படுத்த வேண்டும். அவை இவை :

1. முதலில் தமிழ் மொழியை ஆரிய அடிமைத்தனத்தி னின்று மீட்பது.

2. கலப்புத் தமிழாக உள்ளதைத் தூய்மையாக ஆக்குவதும் பிழையில்லாமல் எழுதச் செய்வதும் பேசச் செய்வதும்.

3. இக்கால அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்றபடி புதிய சொல் லாக்கங்களும், விரிவாக வளர்ந்து வரும் புதுப் புதுத் துறைகளுக்கேற்பப் புது நூல் ஆக்கங்களும்.

4. இன்றியமையாத நிலையில் தமிழ் எழுத்துகளில் உள்ள இடர்ப்பாடான வடிவங்களை ஒழுங்கு படுத்தல்.

இந்நிலைகளை முறையாக உணர்ந்து கொள்ளாமல், இவற்றைத் தலைகீழாகச் செயற்படுமாறு தமிழக அரசு முற்பட்டிருப்பது நம் போதாத காலமே. தமிழ்த் தூய்மைதான் முதலில் வேண்டப்படுவது. தமிழ் மொழியைப் பிழையின்றி எழுதவும் பேசவும் செய்வதே உண்மையிலேயே தமிழ் நலம் விருமபும் ஓர் அரசின் தலையாய கடமையாக இருக்கவேண்டும். அதற்கு முன் அவ்வகையில் செய்யப் பெறும் முயற்சி நிலையானதாகவும் வலிவானதாகவும் இருக்க, தமிழ் மொழியிலுள்ள ஆரிய அடிமைத்தனம் நீக்கப் பெறுதல் வேண்டும். தமிழே திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்துக்கு மூலமுமாயிருக்க, இடைக்காலத்துத் தோன்றிய சமசுக்கிருதத்திலிருந்துதான் தமிழ் தோன்றியதென்னும் குருட்டுக் கொள்கையும், சமசுக்கிருதமின்றித் தமிழியங்காது என்னும் அடிமை(சூத்திர)த் தன்மையும் நீக்கப் பெறுதல் வேண்டும். அஃதாவது தமிழின முன்னேற்றத்திற்கு எப்படி அவன் சூத்திரத்தன்மை, அஃதாவது அவது ஆரியனுக்கு அடிமை என்னும் தாழ்வு மனப்பான்மை நீங்கப் பெறுதல் வேண்டுமோ, அப்படியே தமிழ்மொழி முன்னேற்றத்திற்கும் அத்தகைய அடிமைத்தனமே தலையாய கரணியம் என்றறிந்து அதுவே முதலில் களையப் பெறுதல் வேண்டும்.

அடுத்து, மொழியை எப்படியும் எழுதலாம் பேசலாம் என் றுரைப்பவர்கள் மொழி நலத்தையும் அதன் முன்னேற்றத்தையும் கருதுவோராக இருக்க முடியாது. மொழி என்பது மக்கள் கால வளர்ச்சியில் தங்களுக்குத் தாங்களாகவே அமைத்துக் கொண்ட கூர்தலற (பரிணும) வரலாற்று எச்சம். அதைச் சிதைப்பது அடாத செயல். தமிழ்மொழி ஏற்கனவே ஓர் இனத் தாக்குதலாலும் அவ்வினத்தின் மொழியாளுமையாலும் பலவகைச் சீர்கேடுகளுக்கும் சிதைவுகளுக்கும் ஆளாகியுள்ளது. இவற்றை நன்கு ஆராயாமல் ஓர்

அரசு, தனக்கு அதிகார வாய்ப்பும் காலச் சாய்காலும் கிடைத்து விட்டன என்பதற்காகத் திடுமெனச் செயலில் ஈடுபடுவது அறிவான செயலாகாது.

இக்காலத்தில் உள்ள தமிழ்ச் செய்தித் தாள்களிலும் பாடப் பொத்தகங்களிலும் உள்ள எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள், தொடர்ப் பிழைகள், மரபுப் பிழைகள், கலப்பு மொழிப் புகுத்தல்கள் ஏராளம். ஆங்கிலத் தாள் ஒன்றில் இத்தகைய பிழை களுள் ஒன்றேனும் வருவதாகக் காட்ட முடியாது. வந்தாலும் ஆங்கிலங்கற்ற அறிஞர்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். தமிழ்மொழி மட்டும் இளப்பமானதா என்ன? ஏன் அதன் நலத்தில் மட்டும் அத்துணைக் கவனக் குறைவு.

எடுத்துக்காட்டாக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையினின்று வெளிவந்த எழுத்துச் சீர்திருத்தக் குழுவின் அரசாணை நிலை எண் : 560. நாள் 30—3 –79—கல்வித்துறை (த. 1) என்னும் அமர்த்தக் கட்டளையில் மட்டும், 18 ஒற்றுப் பிழைகளும், 4 மரபுப் பிழைகளும், 5 தட்டச்சுப் பிழைகளும், பல கலப்புச் சொற்களும் உள்ளன. இரண்டரை பக்கம் உள்ள ஓர் அரசுக் கட்டளையிலேயே, (அதுவும் தமிழ் வளர்ச்சித் துறையினின்றும் வந்தது) இத்தனைப் பிழைகள் இருந்தால், மொழி நிலையில் பொதுமக்கள் எழுதும் அல்லது பேசும் மொழியில் எத்தனைப் பிழைகள் இருக்கும். ஆங்கில மடல்களிலும, வெளியீடுகளிலும் இத்தனைப் பிழைகள் இருப்பதை நாம் ஏன் ஒப்புவதில்லை. தமிழ் மட்டும் என்ன ஏதிலி மொழியா? அல்லது மாற்றாந்தாய் மொழியா? எழுத்தைச் சீர்திருத்த முற்படும் அரசு இதைப்பற்றி மட்டும் ஏன் கவனம் செலுத்த கூடாது? மேலும், மிகச் சிறுபான்மையினரே கையாளும் தட்டச்சுப் பொறிக் காக எழுத்துகளைத் திருத்துவது குல்லாய்க்காகத் தலையைச் செதுக்கும் செயலே. எழுத்துகளுக்கேற்ற தட்டச்சுப் பொறியைக் கண்டுபிடிக்க முற்பட வேண்டுமே யல்லாது, தட்டச்சுப் பொறிக்காக எழுத்துகளைத் திருத்த முற்படுவது அறியாமலும் ஆராயாமலும் செய்யும் செயலாகும்.

பல ஆயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து, படிப்படியாகத் திருத்தமுற்று தேரப்பெற்ற ஒரு மொழியின் எழுத்துகளை அவ்வளவு விரைவில் சீர்திருத்திவிட முயன்றுவிடலாகாது. உலகின் பல நாடு களிலும், பல அரசுகளின் கீழும் வாழும் ஒரு பேரினத்தின் முதிர்ந்த நிலையான மொழியின் எழுத்துகளை, எடுத்த எடுப்பில் ஒரு சிறு கட்டளையின் கீழ் மாற்றிவிட முனைதல் பெரும் பிழையாகும். அடுத்து வரும் ஓர் அரசு அக்கட்டளையை மாற்றி விடாது என்பதற்கு என்ன அடிப்படை? தமிழ் மொழியும் அதன் எழுத்துகளும் மெய்யறிவுக் கருத்தை அடியொட்டி வளர்ச்சி யடைந்தவை. சிற்சில கால, அறிவு வளர்ச்சிக்குரிய முட்டுப்பாடுகள் அதில் இருக்கலாம். ஆனால் அவற்

றைத் தெளிவாக ஆராயாமல் வினை செய்ய முற்படுவது மிகமிகத் தவறுனதாக முடியும். காரணிய கரும அடிப்படையில் தோன்றிய எழுத்துகளில் அக்காரணமறிந்த பேரறிஞர்களே கை வைக்க முடியும்.

எழுத்துச் சீர்திருத்தக் குழு அமைத்து ஆராய்ந்து அதன் முடிவைக் கேட்ட பின்பே, அதுபற்றிய கட்டளையைக் கொணர்ந் திருத்தல் வேண்டும். அவ்வாறின்றிக் கட்டளை போட்டுவிட்டும், சீர்திருத்தப்பெற்ற எழுத்தால் பள்ளிப் பாடப் பொத்தகங்களையும் விரைவு விரைவாக (திருத்தத்திற்குத் திருத்தக் கட்டளை வருவ தற்குள்) அச்சிட்டு விட்டும், அதன் பின்னர் ஆராய்ச்சிக்குழு அமர்த்தியிருப்பது, மக்களை ஏமாற்றும் செயலும் அறிஞர்களை அவமதிக்கும் செயலுமாகும். முன்பு திருத்தத்தில் அறிவிக்கப் பெற்று, பின்பு திருத்தப் பெறுமல் விடுக்கப் பெற்ற **'ஐ, ஔ'** என்ற எழுத்துகளையும் புது எழுத்துகளாலேயே பாடப் பொத்தகங்களில் அச்சிடப் பெற்றிருப்பது ஓர் அடாத செயலே ஆகும். இதுபற்றி அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். அன்றேல் அரசின் நடவடிக்கை அறங்கொன்றது ஆகும். (இதுவகையில் இன்னொரு செய்தியையும் அரசின் கவனத்துக்குக் கொணர வேண்டுவது நம் கடமையாகும்; அஃதாவது திருத்தப் பெறுமல் விடுக்கப்பெற்ற **ஐ, ஔ** எழுத்துகளுக்குச் சில அதிகாரிகள், 'அரசு **அய், அவ்** என்று எழுத வேண்டாம் என்று சொல்லவில்லையே' என்று புது விளக்கமும் கொடுக்கின்றனர். இதுபற்றியும் அரசு எச்சரிக்கையாக இருக்க வேண்டுகிறேம் மேலும் அண்மையில் கூடிய எழுத்துச் சீர்திருத்த குழுவின் முதல் கூட்டத்தில், ஏற்கனவே அரசு மேற் கொண்ட எழுத்துத் திருத்தக் கட்டளைக்கு அறிஞர் குழுவின் இசைவுத் தீர்மானம் கேட்கப்பெற்றது. இஃது அரசு ஆராயாமல் செய்துவிட்ட ஒன்றுக்கு அறிஞர்கள் சான்றளிப்பதை வற்புறுத்தும் ஒரு சூழ்ச்சியான செயல் போல் இருக்கிறது. இது கரவான ஓர் அரசியல் விளையாட்டாகும். மொழி நிலையிலும் இப்படி விளையாடும் அளவிற்கு அரசியல் வலுப்பெற்றிருப்பது எதிர்கால மக்கள் நலனுக்குப் பெருந் தீங்கு தருவதாகும். எழுத்துச் சீர்திருத்தக் குழு இன்னும் நன்கு ஆய்ந்து முடிவு கட்டாத முன்பே, கருதிய சீர்திருத் தத்தை நடைமுறைப் படுத்துவது சரியாகாது.

அரசு ஒரு திருத்தத்தைக் கட்டாயமாக மேற்கொள்ள விரும்பும் பொழுது, அரச அச்சமும், அரசுத்துணை நாட்டமும், பதவியுயர்வு விருப்பமும் கொண்ட அறிஞர்கள் சிலர் அதற்கு ஒப்புதல் கொடுத்தே தீர்வர். எனவே இது நடுநிலைமையும் நயன்மையும் ஆகாது. மறை முகமாக அச்சுறுத்துவது போன்றதே! வளர்ந்து பழைமையான ஒரு மொழியின் எழுத்துகளைத் திருத்த இத்துணை விரைவில் எந்த நாடும் எந்த ஓர் அரசும் இதுவரை முற்பட்டதில்லை.

இக்கால் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அரசுக்கு வேண்டிய அதிகாரிகள், கட்சித் தலைவர்கள், கட்சிச் சார்புப் பேராசிரியர்கள், அல்லது அரசு ஆதரவை எதிர்பார்த்துக் கிடக்கும் அச்சவுணர்வுள்ள பேராசிரியர்கள் சிலரே ஆதரிக்கின்றனர். அவர்களிலும் பெரும்பாலார் இறை நம்பிக்கையற்றவர்களே! இறை நம்பிக்கையற்றவர்கள் இறை நம்பிக்கையுள்ளவர்களையும் இணைத்து வாழும் ஒரு நாட்டின், இறைமை சான்ற மிகப் பழைய ஒரு மொழியின், அல்லது மொழியெழுத்தின் உட்கூறுகளை நன்கு அறியவும் மாட்டார்கள்; நம்பவும் மாட்டார்கள்.

மிகப் பெரும் புலவரான மறைமலையடிகளும், உ. வே. சாமிநாதர், சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி மு. கதிரேசனார், ந, மு. வேங்கடசாமியார், கா. சுப்பிரமணியனார், பா. வே, மாணிக்கனார் முதலிய பெரும் புலவர்களும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை ஆதரிக்கவில்லை. மாறாக மறுத்தே வந்துள்ளனர். மேலும், அரசு செய்யும் அறமும் நெறியும் அல்லாத வினைகளைத் துணிந்தெதிர்க்கும் கழகப் புலவர்கள்போல் இன்று எவரும் இல்லை. வினைக்கடுமையும் காலக் கொடுமையும் கருதிப் பெரும்பாலும் அரசு கொணரும் எந்தத் திருத்தத்தையும் எவரும் ஏற்கவே செய்வர். அரசை எதிர்த்துக்கொண்டு உண்மைக்குத் துணைபோகும் உள்ளத் துணிவும், மக்கள் நலங் கருதும் மனப்பாங்கும் கொண்டவர் சிலரே இருப்பர். ஆர்வ மிகுதியால் அரசைச் சார்ந்த பெரியார் பற்றுளர்கள் இவ்வகையில் கூறும் கருத்துகளை மட்டும் கேட்டுக்கொண்டு அரசு இச்சீர்திருத்தத்தை வலியுறுத்துவது மிகத் தவறானதாகும்.

திருக்குறளைப் பழம் பொருட் காட்சி சாலைகளில் வைக்க வேண்டும் என்று கூறுவோரும், தமிழில் உள்ள நூல்கள் அனைத்துமே பொய் நூல்கள் புரை நூல்கள் என்று சாடுவோருமே இக்கால் மொழிபற்றிக் கவலைப் படாமல் எழுத்தைத் திருத்த கச்சை கட்டிக்கொண்டு நிற்கின்றனர். அரசு இந்நிலைகளைப்பற்றி நன்கு ஆய்தல் வேண்டும். வள்ளுவர் கோட்டத்தையே இடிக்க வேண்டும் என்று இவர்கள் கூறினும் வியப்பதற்கில்லை.

பெரியார் ஒரு குமுகாயச் சீர்திருத்தக்காரர்; மொழிப் புலவரும் இலக்கண இலக்கியப் புலவரும் அல்லர். குமுகாய நிலையில் அவரின் எந்தச் சீர்திருத்தமும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கலாம். மொழி நிலையில் அவர் கருத்து முற்ற முடிந்த கருத்தாக இருக்க முடியாது. மேலும், அவர் தமிழை (அதில் உள்ள அறிவியல் கூறுகளை உணராமல், ஆரியப் புன்மை சான்ற புராணப் புளுகு நூல்களையும் பொய்யுரைகளையும் மட்டும் கண்டு வெறுப்புற்று) ஒரு காட்டு விலங்காண்டி மொழி என்று கூறி இகழ்ந்தவர்.

அவரின் இறுதிக் காலத்தில், திருச்சியில், இக்கட்டுரையாசிரியனே அவரை நேரில் கண்டு, தமிழ் மொழியைப் பற்றி அவர்க்கு யாரோ தவருகச் சொல்லியிருக்கிருர்களென்றும், அது தோற்ற வரலாற்று நிலையில் ஒரு காட்டு விலங்காண்டிக் காலத்து மொழியென்ருலும், வளர்ச்சி வரலாற்று நிலையில் மிகச் செப்பமும் நுட்பமும் திட்பமும் வாய்ந்த மொழி யென்றும்; இனி அவ்வாறு அவர் கூறுவாராளுல் தாமவரை நேரிடையாக எதிர்க்க நேருமென்றும், சான்றுகளுடன் கூறக் கேட்டு, மிக மகிழ்ந்து, தாம் தமிழ்மொழியை இனி அவ்வாறு காட்டு விலங்காண்டி மொழி என்று கூறமாட்டேன் என்றும், தமிழரை மட்டும் காட்டு விலங்காண்டிகள் என்று கூறுவதாகவும் விடையளித்தார். அதற்கு இக்கட்டுரையாசிரியனும் இசைந்து வந்ததும், அதன்பின் பெரியார் இறுதிவரை தமிழைப் பழித்துக் கூருமையும் கருதத் தக்கன.

மேலும் பெரியார் தொடக்கத்தில் திரு. வி. க, மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார் போலும் தமிழ்ப் பேரறிஞர்களுடன் தொடர்பு கொண்டிருந்த காலத்தில், தமிழ் மொழித் தூய்மையையும் வலியுறுத்தி உள்ளதை முன்னரே தென்மொழியில் சான்றுகளுடன் எடுத்துக் காட்டியுள்ளோம். உண்மை இவ்வாறிருக்க அவர் பெயரால் செய்ய வேண்டிய பிற இன்றியமையாத திருத்தங்களை (கடவுள் ஒழிப்பு, கோயில்கள் ஒழிப்பு, மதங்கள் ஒழிப்பு, புராண இதிகாசங்கள் ஒழிப்பு, சாதியொழிப்பு, மூடக்கொள்கைகள் ஒழிப்பு, பெண்கள் விடுதலை, கருவறை நுழைவு, இந்தி யெதிர்ப்பு, தமிழ் நாட்டு விடுதலை முதலியவற்றைச்) செய்யத் துணிவில்லாமல் விட்டு விட்டுச் செயல் எளிமையும் தமிழரின் இளித்தவாய்த் தன்மையையும் நன்கு பயன்படுத்திக்கொண்டு எழுத்துச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பது, தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்கும் ஒரு பொருளற்ற அறியாமைச் செயலே!

இறுதியாக அரசுக்கு ஒன்று கூறிக் கொள்கின்ருேம். இக்கால் உள்ள தமிழ்ப் பேரறிஞர்களில் மொழியறிஞர் பாவாணரே தமிழுக்கு அதிகாரத் தன்மையான கருத்துகளை வழங்கக் கூடியவர். அரசுக்கு எப்படி மா. கோ. இராமச்சந்திரனுர் முதல்வரோ, அப்படியே தமிழுக்குப் பாவாணரே முதல்வர். பாவாணரையும் அவர் போல் ஓரிருவரையும் தவிர இதில் முடிவான கருத்தறிவிக்கத் தகுதியுள்ளவர் வேறு எவருமிலர். அவரே மொழியின் வேரையும், மூலத்தையும், மூலஞ்சேர் சொற்களையும், சொற்கள் சார்ந்த பொருள்களையும், உலகின் மிகப் பெரும் மொழியிலக்கண நிலைகளுடனும் சொற்களுடனும் ஒப்பீட்டாய்வின் மூலம், அவற்றின் தெளிவையும், எழுத்தையும் ஆய்ந்து கண்டு, பல நூல்களை எழுதி வெளியிட்டவர். இன்னுல் பல நூல்களை வெளியிட உள்ளவர். அவர் போல் மொழித் துறையில் முட்டறக் கற்று முழுத்துறை போகிய மூதறிஞரைக்

காண்பதும் அரிது. இவர் தகுதியைப் புலத்துறையில் மறைமலை யடிகளும், அரசுத் துறையில் அறிஞர் அண்ணு அவர்களும் தம் கைப்பட எழுதிய மடல்கள் வழி ஏற்றுக்கொண்டுள்ளனர்.

தமிழ் எழுதுகிறவர்கள், அல்லது தமிழில் பட்டம் பெற்றவர்கள் எல்லாரும் தமிழில் தேர்ந்த அறிஞர்கள் ஆகிவிட மாட்டார்கள். தமிழ் மொழியையும் எழுத்தையும் இலக்கண இலக்கியங்களையும் ஆராய்ந்து ஐயந்திரிபற விளங்குபவர்களையே தேர்ந்தவர்களாகக் கருதுதல் வேண்டும். முதுமையோ பட்டங்களோ ஒருவரின் அறிவுத் தகுதிக்குச் சான்ருகா. தமிழ்ப் பற்றற்ற-தமிழைக் காட்டிக் கொடுக்கும் தம்பிரான்மார்களாலும், கொண்டான்மார்களாலும், தமிழறிவு குறைந்த தான்தோன்றிப் பேராசிரியர்களாலும் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையான, உறுதியான கருத்துகளைக் கொடுத்து உதவ முடியாது. எனவே அரசு அதிகாரத் துறையில் முதலமைச்சர் கருத்து எப்படி முடிவானதோ அப்படியே இந்தத் துறையிலும் பாவாணரின் கருத்தையே முடிவானதாக ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். (முதலமைச்சரும் பாவாணரைப் பற்றி நன்கு அறிவார்.) ஆர்வம் உள்ளவர்களை யெல்லாம் இத்துறையில் மிக்க அறிவுள்ளவ ராகக் கருதிவிடக் கூடாது. ஆர்வம் உள்ளவர்கள் அறிவில் குறைந் தவர்களாகவும், அறிவு மிக்கவர்கள் ஆர்வம் குறைந்தவர்களாகவும் இருக்கக் காண்கிருேம்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்

என்னும் தெரிந்து தெளிதல் அதிகாரத்தில் வரும் குறளின்படி, ஒருவர்க்குள்ள தகுதியை அவர் ஆய்வு நூல்களைக் கட்டளைக்கல்லாக வைத்துத் தெரிந்து அவரைத் தெளிய வேண்டும். கண்டவர்கள் கருத்தை யெல்லாம் அரசு கேட்கக் கூடாது. ஒரு பக்கம் பிழை யின்றித் தமிழ் மொழியை எழுதத் தெரியாதவர்களை யெல்லாம் மொழித்துறையைப் பற்றிய கருத்தறிவிப்பாளராகக் கருதிவிடக் கூடாது. மேலும் மொழியியல் என்பது அறிவியலும் மெய்யறி வியலும் கலந்த நுண்ணியல் துறை.

மேலும் இப்பொழுது அமர்த்தப் பெற்றிருக்கும் எழுத்துச் சீர்திருத்த அறிஞர் குழு நடுநிலையான குழு அன்று. அதில் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தங்கள் கட்சிக் கொள்கையாகக் கருதிக் கொண்டு கண்ணை மூடிக்கொண்டு ஆதரிப்போரே பெரும்பான்மை யாக உள்ளனர். இனி, அறிவுத் தேர்ச்சிக்குப் பெரும்பான்மையும் ஓர் அளவீடாகாது. ஓரிருவர் கருதிய தேர்ந்த நுண்ணிய அறிவு முடிவு சிறுபான்மை கருதித் தள்ளப்படலாகாது. அறிவுக் களம் தேர்தல் களம் அன்று. இவற்றையெல்லாம் எண்ணிச் செய்யாமல் வெறும் ஆர்வத்தாலும் அடாவடித்தனத்தாலும் அதிகாரத்தாலும் கொண்டு

# நாவலர் சோமசுந்தர பாரதியார் பற்றிப் பாவாணர்

அவர் (சோமசுந்தர பாரதியார்) போன்று. அவையடக்கும் அரிமாத் தோற்யமும், சுவை மடுக்கும் வினை நல மாற்றமும்; அழகிய வசிய முகமும், பழகிய வளமை யகமும்; கூரிய வங்கிமீசை முறுக்கும், கூரிய வன்கட் கூற்று நறுக்கும்; விளங்குரை வெண் கலக் குரலும், விழுமிய பொருள் விளக்குந் திறனும்; காமஞ் செப் பாது கண்டது மொழியும் கட்டாண்மையும், ஏமமும் சாமமும் இன்றமிழ் காக்கும் பற்றுண்மையும்; பரந்த நோக்கும், பாங்கான போக்கும்; ஒருங்கேயுடைய வழக்கறிஞரேனும் தமிழ்ப் பேராசிரிய ரேனும் பிற தொழிலாளரேனும் இன்று தமிழகத்திலும் இப் பாரில் வேறெப் பகுதியிலும் காண வியலுமோ?

இங்ஙனம், அறிவுத் துறையில் மறைமலையடிகட்கு அடுத்த படியாகவும், போராட்டத் துறையில் ஈடிணையற்ற கருணாகரத் தொண்டைமான் போலும் படைத் தலைவராகவும், தமிழ்க்காப்புத் தொண்டாற்றி,

'எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்'

'சொலல்வல்லன் சோர்விலான் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது'

'இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி'

முதலிய குறள்களை விளக்கும் வகையில் வாழ்ந்த நாவலர் பாரதியார், தமிழர் என்றும் மறவாது போற்றற் குரியார்.

—கட்டுரை :—நாவலர் சோமசுந்தர பாரதியாரின்
நற்றமிழ்த்தொண்டு
'செந்தமிழ்ச் செல்வி' ஆகத்து'79

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

வரப் பெறும் எழுத்துச் சீர்திருத்தம் மட்டுமன்று. எந்தச் சீர்திருத்த மும் காலத்தால் நிலை நிற்காதென்பது வரலாறு. அரசு உணர்தல் வேண்டும் என்று எச்சரிக்கிறோம்.



தொடர்: 7

# என் இலங்கைச் செலவு.

—பெருஞ்சித்திரனார்.

## 12. முதல்நாள் மாநாட்டு முயற்சிகள்!

நான் இலங்கைக்குப் புறப்படும் பொழுதே ஏதோ ஓர் அயல் நாட்டிற்குப் போவது போன்ற உணர்ச்சி என் மனத்தில் தோன்ற வில்லை. எப்பொழுதோ இருந்து வாழ்ந்த நம் சொந்த ஊருக்குப் போவது போன்ற உணர்வே எனக்கிருந்தது. எனவேதான் அங் கிருந்த தமிழர்களைப் பார்த்தவுடன், தமிழகத்தின் தெற்கு, தென் மேற்குப் பகுதி மக்களைப் பார்த்துப் பழகுகின்ற உணர்வு தோன்றியது. பண்டிதர் வீட்டில் உள்ள அன்பர்களைப் பார்த்த பொழுதோ, அவர்கள் நெடுநாள் பழகியவர்கள் போலவே எனக்குப் பட்டார்கள். இத்தகைய நினைவுடனும், இலங்கையின் பண்டைய வரலாறு, இன்று அங்குத் தமிழர்கள் வாழ்ந்து வருகின்ற கொடுமையான நினைவுகளுடனுந்தாம், அன்று பண்டிதர் வீட்டுத் தனியறையில் நெடுநேரம் தூக்கமில்லாமல் படுத்திருந்தேன்.

மறுநாள் (20-5-78) காரிக்கிழமை காலை 5-மணியளவில் விழித்துக் கொண்டேன். நான் தங்கியிருந்த அறை, வீட்டின் முன் பகுதியில் இருந்ததால் கதவைத் திறந்து கொண்டு தாழ்வாரத்திற்கு வந்து, அங்கிருந்த நாற்காலியொன்றில் அமர்ந்து, மிக மிக அமைதி யாக இருந்த அந்த விடியல் பொழுதை மகிழ்ச்சியுடன் கவனித்துக் கொண்டிருந்தேன். வீட்டுக்கு முன் உள்ள பரந்த வாயில் நிலத்தில் இருபுறமும் மாமரங்கள் இருந்தன. நன்றாகவும் சிறிது வேகமாகவும் அடித்துக் கொண்டிருந்த காற்றினால், மாங்காய்கள் சில தரையில் வீழ்ந்திருந்தன. மெல்லிய நிலவொளியில் அந்த அமைதியைச் சுவைப்பதற்காக, வெற்றிலை போட்டுக்கொண்டு, வாயிலுக்கு இறங்கி வந்தேன். சுற்றடைப்பின் இரும்புக்கதவு வரையில் சென்று நின்று வானவெளியைப் பார்த்தேன். எவ்வளவு அழகிய, மிகவும் அமைதி யான இயற்கைச் சூழல்! பழந்தமிழகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பது போலும் ஓர் உணர்ச்சி என் உள்ளத்தில் தோன்றியது. உடல் சிலிர்த்தது!

மரத்தடியில் கிடக்கும் மாங்காய்களில் ஓரிரண்டை எடுத்துப் பார்த்தேன். அணில் கொரித்ததும், கிளி கொத்தியதுமாக, அவை பழுத்தும் பழுக்காதும் இருந்தன. அந்நிலையில் திடுமென எங்கோ படுத்திருந்த நிமலன் வளர்க்கும் நாய் விரைந்து வந்து என் மேல் தாவியது. நான் இந்த நாயைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இரவு நிமலனுடன் பேசிக் கொண்டிருக்கையில் இந்த நாயைப் பார்த்தேன். 'நல்ல நாய்; கடிக்காது' என்று இரவு சொல்லியிருந்தார். ஆனால் இது கட்டப்பெறாமல் அவிழ்த்துவிடப் பெற்றிருக்கும் என்று நினைக்க வில்லை. யார் கண்டது? என்னை அதற்கு ஒருவேளை பிடிக்காமல்

போய், என்னைப் பதம் பார்க்கும் முயற்சியில் ஈடுபட்டால் யார் வந்து தடுக்க முடியும்? உடனே உள் அறைக்குப் போய் விட முயன்றேன். நாய் விடவில்லை. என்மேல் தாவித்தாவி, வாயைத்திறந்து, கையைக் கவ்வ முயன்றும், வேட்டியைப் பிடித்து இழுத்தும் விளையாடத் தொடங்கிவிட்டது. ஆனால் கொஞ்சம் முரட்டு விளையாட்டு. மெதுவாக அதை விலக்கிக் கொண்டே தாழ்வாரத்திற்கு வந்து முன்பகுதியை அடைந்து, கதவைத் தாழிட்டுக் கொள்வதற்குள் போதும் போது மென்றாகி விட்டது.

காலை 6-மணியளவில் பண்டிதர் மலையுந்தில் (Jeep) கொழும்பு பாராளுமன்றக் கூட்டங்களை முடித்துக் கொண்டு வீடு வந்தார். என்னைப் பார்த்ததும் மிகவும் மகிழ்ந்தவராய் ஊர்ச் செய்திகள் பலவற்றையும் உசாவினார். தாம் ஊரில் இல்லாமை பற்றியும், தொலைவரி குறித்த காலத்தில் கிடைக்காதது பற்றியும், எனவே, என் வரவு பற்றிச் சரிவரத் தெரிந்து கொள்ள இயலாமற் போனமை பற்றியும் கூறி, என்னை முறையாக வரவேற்க முடியாமற் போனதற்காகப் பெரிதும் வருந்தினார். நான் அதைப்பற்றி யெல்லாம் கவலைபட வேண்டாம் என்று கூறி அவரை ஆறுதலடையச் செய்தேன்.

பின்னர் மாலை நடைபெறப் போகும் மாநாட்டு நிகழ்ச்சிகள் பற்றிப் பேசினோம். பண்டிதர் அவர்கள் அவர் துணையாளரிடமும் அன்பர்களிடமும் ஊர்வல ஏற்பாடுகள் எவ்வாறு அமைதல் வேண்டும், நிகழ்ச்சிகள் எவ்வாறு நடைபெறுதல் வேண்டும் என்பன பற்றியெல்லாம் விளக்கமாக எடுத்துக் கூறிக் கொண்டிருந்தார். நான் குளியல், சிற்றுண்டிகளெல்லாம் முடித்துக் கொண்டு, பண்டிதர் அவர்களின் துணையாளர் ஏகநாதன் அவர்களிடம், நான் இலங்கை வந்து சேர்ந்தது பற்றி என் இல்லத்திற்குத் தொலைவரி ஒன்று கொடுக்கச் செய்தேன்.

பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் 64 அகவை நிரம்பியவராக இருந்தும், சிறிதும் ஓய்வு ஒழிவின்றிப் பொதுப் பணிகளில் ஈடுபடும் அவருடைய சுறுசுறுப்பு என்னை மிகவும் வியப் படையச் செய்தது. இரவு பகல் எந்நேரமும் மக்களைப் பற்றியும் நாட்டைப் பற்றியுமே அவர் எண்ணுகிறார்; பேசுகிறார். வீட்டார் அவரை இடையிடையே இல்லச் சிக்கல்களில் இழுத்து ஈடுபடுத்தினாலன்றி, அவர் எந்நேரமும் முழுமையான பொது நிலைகளைப் பற்றியே அக்கறை கொண்டிருப்பது, நம் நாட்டுத் தலைவர்களைப் பற்றி என்னை எண்ணச் செய்தது.

பெரும்பாலும் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சித் தலைவர் களுக்கும், ஈழத்தில் உள்ள தமிழ்த் தலைவர்களுக்கும் ஒரு பெருத்த வேறுபாடு உண்டு. நம் நாட்டுத் தலைவர்களைப் பொதுத் தொண் டர்கள் பார்ப்பதும், பேசுவதும், தங்களுக்குள்ள குறைகளைத் தெரி விப்பதும் அவ்வளவு எளிதன்று. சில அரசியல் கட்சித் தலைவர்களைப் பார்ப்பது மிகவும் கடினம். தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்களை

அவர் ஆட்சியிலிருந்த பொழுது ஒருமுறை நான் பார்த்துப் பேசுவதற்கு மூன்று நாட்கள் சென்னையில் தங்கிக் காத்திருக்க வேண்டியிருந்தது. இப்பொழுதுள்ள அ.தி.மு.க. முதலமைச்சர் அவர்களையோ பார்ப்பதே இயலாது என்று கேள்விப் படுகிறேன். அவர் அமைச்சரவையிலுள்ள குறிப்பிட்ட ஒரிருவர் அல்லது பெண் அமைச்சர்கள் தவிர அவரைப் பார்க்கவே இயலாது என்று சொல்லுகிறார்கள். அக்கூற்று ஒருவகையில் பொய்யாக இருக்குமோ என்று எண்ணிக் கொண்டிருந்த எனக்கு, ஒருமுறை அவரைப் பார்த்துப் பேச வேண்டிய தேவை ஏற்பட்டது. கடந்த உலகத் தமிழ்க் கழக, நான்காவது மாநாட்டின் பொழுது பாவாணர் தாம் செய்து கொண்டிருக்கும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொடர்பாக, அவருக்குச் செய்து கொடுக்க வேண்டிய ஏந்துகள் பற்றி அவரும் நானும் நேரிடையாகப் பேசுவதற்கு, என் மருமகனுர் வழி எழுத்து முறையாக எழுதிக் கொடுத்திருந்தும், ஏறத்தாழ இரண்டு மாத காலமாக அவரைப் பார்க்க நாளே கிடைக்கவில்லை என்று தெரிந்து மிகவும் வருத்தப்பட்டோம். உ.த.க. மாநாட்டில் கலந்து கொள்ளச் செய்வதற்காக முதலமைச்சரை அழைக்கின்ற முயற்சியும் அவரைப் பார்க்க இயலாததால் முடியாமலேயே போய் விட்டது.

இதுபோலவே இங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்கள, பாராளுமன்ற உறுப்பினர்கள், நடுவணரசுத் தொடர்பான அதிகாரிகள் முதலியவரையும் அவ்வக் காட்சிகளில் மிகுந்த சாய்கால் உடையவர்கள் வழியாக அன்றிப், பொதுமக்களில் எவரும் நேரிடையாகப் போய்ப் பார்த்துப் பேசி விடுவதென்பது இயலவே இயலாது. ஒரு முறை ஒருவர் இக்கால் உள்ள முதலமைச்சர் திரு. ம. கோ. இராமச்சந்திரன் அவர்களை ஒரு செய்திக்காகப் பார்த்துப் பேசப் பல நாட்கள் காத்திருந்தும், பல 'குட்டி' அமைச்சர்கள் வழியாகப் பலமுறை முயன்றும், அவரைப் பார்க்க முடியாமல் சோர்வுடன் என்னிடம் வந்தபொழுது, அவர் மிகவும் தோல்வியுற்ற மனப்பான்மையுடன் 'கடவுளே வந்தாலும் அவரைப் பார்க்க முடியாதுங்க' என்று கூறியது எனக்கு மிகவும் வருத்தத்தைத் தந்தது. அரசன், 'காட்சிக்கு எளிய'னுக இருத்தல் வேண்டும் என்று கூறும் இலக்கணம், நம் அக்கால அரசர்களிடம் ஒருவேளை பொருந்தியிருக்குமோ இருக்காதோ, இக்காலத்தில் உள்ள நம் அமைச்சர்களிடம் பொருந்தாது என்றே கருதத் தோன்றுகிறது.

ஆனுல், இலங்கையில் உள்ள தமிழர் தலைவர்களிடம் நம்நாட்டு அமைச்சர்களிடம் இல்லாத ஒரு பொது நிலை, காட்சிக்கு எளிமையான ஓர் உயர்ந்த தன்மை இருப்பதை நான் நேரில் கண்டு மகிழ்ந்தேன். பாராளுமன்ற உறுப்பினரான பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினமும் சரி, தமிழர் விடுதலை முன்னணித் தலைவர் திரு. அமிர்தலிங்கமும் சரி, அறிமுகமில்லாத ஏழை எளிய மக்கள் எப்பொழுது வந்தாலும் அவர்களைத் தங்கு தடையின்றிப் பார்க்கின்றனர்; பேசுகின்றனர். சில

சோமசுந்தர பாரதியாரின் நூற்றாண்டு நினைவுக் கட்டுரை:

# அருந்தமிழ் நாவலரின் *நாவலிடும் நூற்றாண்டு!

—தென்மொழி மறை. நித்தலின்பன்.

இந்த இருபதாம் நூற்றாண்டில், தமக்கென வாழாது, தனக்கெனவே உயிர்த்துப் பிறந்து, உழைத்தும் உய்வித்தும் வாழவெனச் செந்தமிழ்த்தாய் பெற்றளித்த அருந்தவச் செல்வருள், தலையாய தனித்தமிழ்த் தந்தை **மறைமலை அடிகளார்க்கு** அடுத்து வைத் தெண்ணத்தக்கார் சிலருள், தமிழ்மான வீர மறவர் **நாவலர் சோமசுந்தர பாரதி** என்னும் 'நிலவழகக் கலைமகன்'ரும் ஒருவர். ஆம், அவர்பால் நாம் காண்டற்குக் கிடைக்கும் ஒரே வழுவமைதி, அவர்தம் மானத் தமிழுணர்வு முழுமை வாய்ந்து நறுந்தனித் தூய் தமிழாகப் பூத்து விரியாமையே. மற்றெல்லா வகையானும் அவர்தம் வீறு மிகுந்த வினை வாழ்க்கை, முழு மதியின் நிறையொளியை ஒப்பதேயாகும்.

"(மறைமலை) அடிகளார் ஒன்றைத் துணியவும் வல்லார்; துணிக்கவும் வல்லார்!" எனப் புகலுவர் க. ப. மகிழ்நனர். நாவல

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

நேரங்களில் நம் பண்டிதர் அவர்கள் வெளியில் அங்கும் இங்குமாக அலைந்து விட்டு வந்து மிக அயர்வுடன் அப்பொழுதுதான் படுத் திருப்பார்கள். அந்நேரம் (அஃது இரவின் பின்னேரமாகவும் இருக்கும்) எவராகிலும் வந்து வாயிற்படியில் நின்று 'ஐயா' என்பார்கள். உடனே, இவர் விழுந்தடித்துக் கொண்டு எழுந்து ஓடி வந்தவரின் குறைகளை மிகவும் பரிவுடன் கேட்டு, அவற்றுக்குரிய விடிவுகளைக் கூறிவிட்டு வந்து பிறகு ஓய்வெடுப்பார். இந்நிலைகளை யெல்லாம் நான் அவர் இல்லத்தில் தங்கியிருந்தபொழுது பல முறைகள் நேரில் பார்த்துப் பெருத்த வியப்பும் அதே பொழுது நிறைந்த மகிழ்வும் கொண்டிருக்கின்றேன். தங்களைப் பார்த்துப் பேச வந்த ஏழை மக்களுக்குத் தங்களால் உதவ முடிகிறதோ இல்லையோ, அவர்கள் வந்ததற்குத் 'தலைவரைப் பார்த்தோம்; பேசினோம்' என்னும் நிறைவே போதும் என்றுதான் உணர்வார்கள். இந்நிலைகளை இங்குள்ள நம் தமிழகத் தலைவர்களும் பின்பற்றுதல் வேண்டும் என்பதற்காகவே இங்கெடுத்துக் கூறினேனேயன்றி, எவரையும் குறைகூற வேண்டும் என்னும் நோக்கத்தாலன்று என்பதை மிகவும் அன்புடன் கூறிக் கொள்கிறேன். நெடுங்காலமாக நொடிந்துபோன ஓர் இனத்தின் மக்களை அவ்வினத்தின் முன்னோடிகளே முனை முரிப் பார்களானால், அவர்களைக் கடைதேற்றுவார் எவர் உள்ளார் என்பதை எண்ணிப் பார்க்கும்படி தலைவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

(தொடரும்)

---

* நாவலிடுதல்—வினைக்கழைத்தல்.

ரவர்களோ, தமிழ்ப் பகைமையையும் பகைவரையும் துணிப்பதே கொள்கையெனக் குறிக்கொண்டு வாழ்ந்த சிலிர்மானக் கோளரி! அரிமா என்றவுடன், சிலிர்த்தெழும் அதன் பிடரிமயிரே நினைவிற்கு வரும். அதுபோல், நாவலர் 'கலைமகனார்' (பாரதியார்) என்றவுடன் அவர்தம் முகத்து மீசையே முன்வந்து மருட்டாநிற்கும்!

இம் மீசை பற்றிய ஒருண்மையைப் பலர் அறியார். அதுதான், அஃது ஓர் ஒட்டு மீசையே என்பது! எதனாலோ நாலவரவர்கள், கற்றைக் கருமயிர் பொதுளிக் கதுவிய ஆண்மைத் தோற்றம் வாய்க்கப் பெற்றிருந்தும், இவ்வொட்டு மீசையையே மிக விரும்பி நெடுகலும் புனைந்து வந்தார். அவர்தம் முதுமைத் தோற்றத்து நரை மீசைதான் சொந்த மீசை போல் தோற்றமளிக்கின்றது. ஒருவேளை, ஆங்கிலேயன் கடன் தந்த அறிவுப் பார்வைக் கருவி கொண்டே ஆரியத்தை அடிதுமித்து வந்த காலம் அவர் காலமாகலின், அன்றைய அவரின் மானவீறும் கடன் கொண்ட ஒன்றே என்பது மனத்தில் உறுத்த, இப் புனைவை மேற்கொண்டார் போலும்!

வீரம் என்பது செருமுனையிலும் ஏதக் காலத்திலும் செறிந்து மூண்டு நிற்கும் சில கண அல்லது நாழிகை நேர மறவுணர்ச்சி. ஆனால் வீறு என்பதோ, உயிர் மெய்யின் உள்ளகத்தே வேர் கொண்டு வாழ்க்கைக் காலம் முழுதும் விழுதூன்றிப் புடைத்து நிலைக்கும் மறம் மேவிய (அறவுணர்வின்) முனைப்பு. ஆரியப் பாவலர் பாரதியாரின் உலகில் திருத்த உணர்ச்சி மூட்டத்தின் செறிவை அவரின் வீரமென்றும், நம் தண்டமிழ் நாவலர் 'கலைமகனா'ரின் தமிழியல் அறந்தழுவிய திண்ணறிவுக் கனற்சியை இவரின் வீறென்றும் ஒருவாறு ஒப்பிட்டுரைக்கலாம்.

நாவலரவர்களின் வீறு, பலபுடையும், நந்தமிழ் இனத்தந்தை **பெரியார்** அவர்களின் தன்மான வீறினை நேரொத்ததாகும். அது மட்டுமன்றி, பெரியார் அவர்களின் சிறை மீட்பிற்கே அது கருவியாகவும் இருந்திருக்கின்றது. பெரியாரும் இதனால் அவர்பால் விருப்பமும் நன்றியும் பூண்டிருந்திருக்கின்றார். (அடிகளாரும் நாவலரும் போன்ற செறிதமிழ் அறிவரும் மறவரும் ஆகியவர் தம் தொடர்பு அற்றதன்பின், பொய்யரும் போலியரும் சூழ்ந்து பற்றிக் கொண்டதனால்தான், பெரியாரின் பிற்கால, இறுதி நாள் தொண்டுழைப்புகள் தமிழுக்கும் தமிழனுக்கும் கெடுதலையாகவும் அடுதலையாகவும் களங்கமுற்றன என்பதை ஈண்டு நம்மினத்தார் எண்ணுதல் வேண்டும்.) பெரியாரை ஒப்பவே, இவரும் (தமிழ் மொழிக்கோ), தமிழ் இனம், நாட்டிற்கோ இம்மியளவு—அணுவளவு பகைவரால் மாசு நேர்வதாயினும், உடனே சீறிச் சிலிர்த்தெழுந்து பகையைப் புடைத்தலைத்துத் துடைத் தெறியும் மாட்சியர்.

தமிழ்க் காவல் புரிந்ததோடு, புன்மைதெரி இந்தியெனும் பேய்ப் பகையை ஓட்ட எழுந்த அடிகளார்க்கும் பெரியார்க்கும் தோளாகவும் கைவாளாகவும் நாவலர் நின்றாற்றிய நற்றொண்டை நாம் என்றும்

நினைந்து போற்றக் கடன் பட்டுள்ளோம். இவற்றையே மொழி ஞாயிறு பாவாணர் அவர்கள், தம்முடைய 'தமிழ் வரலாற்'றின் 'கிளர்நிலைப் படல'த்தில், "இந்தியை வன்மையாய் எதிர்த்தவரும், எவருக்கும் அஞ்சாது தமிழைத் தாங்கியவரும் நாவலர் ஆவார்" எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

முடி வேயாத மாவேந்த நெடுமலையாம் அடிகளார்க்குப் போலவே, மறம் வாய்ந்த கோவயவப் பெருங்குன்றமாம் நாவலர்க்கும் ஓர் அரசவுணர்வு, அவர்தம் வாழ்வு நெடுகலும் மாட்சிமையுற மேம்பட்டு நின்றது. அன்றியும், முன்னவர்க்கு அமையாத உண்மை யான அரண்மனைப் பெருவாழ்வும் இவருக்குத் தொண்டாம் (ஒன்பதாம்) அகவை எய்து மட்டும் எட்டையபுர இலக்குமி அம்மை அரசியாரின் அரவணைப்பால் கிட்டியது. அடிகள் பல்லவபுரத்தில் 'பொதுநிலைக் கழக' மாளிகை கட்டி வாழ்ந்தது போலவே, நாவலரும், முதலில் எட்டையபுரத்தும் பின்னர் பசுமலையிலும் வளமனை கட்டிப் பெருவாழ்வு வாழ்ந்துள்ளார். அவர்தம் பெருமிதப் பீடும் விம்மிதச் செம்மாப்பும், என்றும் எங்கும் எவர்முன்பும் தலை தாழாத் தன்மானப் படை மறவராக அவரை வாழவைத்தன; இவையே, இன்று நம் போல்வாரை, இன்று, ஏக்கப் பெருமூச்சுகள் விட்டு, அழுங்குமாறு அங்காக்க வைக்கின்றன!

நாவலரவர்கள் பிறந்தது, கி.பி. 1879, சூலை 27-இல், எட்டைய புரத்து வீர மண்ணில் எட்டையபுரக் குறுநில மன்னரின் உள்படு கருமத் தலைவராகிய எட்டப்பர் (இயற்பெயர், சுப்பிரமணியர்) இவர் தந்தையாவார். அம் மன்னர் முத்துசாமி எட்டப்பரின் தாயார், அரசியார் 'உலக மாதா'வின் வளர்ப்பு மகளாம் முத்தம்மாள் நம் நாவலரவர்களின் நற்றாய். நாவலரின் மாமனாரும் 'சிவனியக் கொண் முடிபுச் சூறாவளி' உயர்திரு சோமசுந்தர(நாயக)ரின் பெயரையே அவருக்குச் சூட்டினர் பெற்றோர்.

பதினோரகவைக்குப் பின்னரே ஒழுங்கான பள்ளிப் படிப்பை மேற்கொள்ளலானார். அரண்மனை வாழ்க்கைச் சூழலால், கழியிளமை யிலேயே தமிழார்வம் மீதூர, தம் அண்டை வீட்டு விளையாட்டுத் தோழரும் தமக்கு இளையவரும் ஆன சுப்பிரமணிய (பாரதியா)ருடன், அஞ்சி ஒளிந்து, எட்டையபுரக் கோவிலின் உட்சுற்று மண்டபத்தில் தாமே தமிழ் கற்றார்! "தமிழ் படித்தால் அடி உறுதி" என்ற காலம் அது!

பின், நெல்லையில் கல்லூரி மாணவராயிருந்தபோது, இவரும் சுப்பிரமணிய(பாரதியா)ரும், யாழ்பபாணப் பெரும்புலவர் ஒருவரால், கழியிளமைப் பருவத்திலேயே திறம்படப் பாப்புனைந்த வல்லமைக் காக, அறிந்தோர் அவைக்கண் 'பாரதி' (கலைமகன்) என்ற பட்டம் அளிக்கப் பெற்றனர்.

இடைக்கலைக் கல்வியை (F. A.) நெல்லையில் முடித்தபின்னர், நெல்லைக் கல்லூரி முதல்வர் சாஃப்டர் துரை மகனாரின் பாராட்டுப்

பரிந்துரையின் பேரில், சென்னைக் கிறித்துவக் கல்லூரியில், அதன் முதல்வர் மில்லர் துரைமகனால் சேர்த்துக் கொள்ளப் பெற்றார். இவர் பாராட்டுதலையும் பெறும்படி, ஆங்குப் பேராசிரியர்களாக வீற்றிருந்த மறைமலை அடிகளாராலும் பரிதிமாற் கலைஞராலும் ஊக்கப்பெற்று, 1902-இல் கலையிளவல் படிப்பில் தேறினார். அதன்பின், சட்டவியல் படிப்பை மேற்கொண்டு 1905-இல் சட்ட இளவலானார்.

உடனே, பிறரெவர் கீழும் பயிலுநராயிராமல், தாமாகவே முனைந்து வழக்குரைஞர் தொழிலில் ஈடுபட்டார். தூத்துக்குடியில் 15 ஆண்டும், மதுரையில் 10 ஆண்டுமாகக் கால் நூற்றாண்டுக் காலம் தொழில் நடத்தினார். அவர்தம் வழக்காடு வன்மையையும், ஆங்கிலேய ஆட்சியாளரும், நடுவரும், காவல் துறையினரும் பிறரும் மருளவும் மதிக்கவும் தொழில் நடத்திய திறத்தையும் நாடே வியந்து போற்றியது.

1913-இல், தாமே பயின்று கலை முதுவரானார். 'செந்தமிழ்', 'தமிழ்ப் பொழில்', 'செந்தமிழ்ச் செல்வி' ஆகிய இதழ்களில் அவர்தம் எழுத்தாற்றல் மிளிர்ந்து ஒளி வீசியது. அவருடைய பேச்சாற்றலுக்குச் சான்று, 1929 மார்ச்சு 11-இல், பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில், திருவள்ளுவர் வரலாற்றை மாசு களைந்து புரிந்தாற்றிய ஆய்வுரைப் பொழிவொன்றே சாலும். தலைமைதாங்கிய உ. வே. சாமிநாதரவர்கள் அவ்வுரையை ஒப்பி ஏற்றுக் கொண்டது, பகைவரை வாயடைக்க வைக்கும இவருடைய தருக்கத் திறமையை நன்கு காட்டும்.

'மாரி வாயில்', 'மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி' என்பன நாவலரின் செய்யுள் நூல்கள், 'சேரர் தாயமுறை', 'தசரதன் குறையும் கைகேயி நிறையும்', 'சேரர் பேரூர்' என்பன அவர்தம் ஆராய்ச்சி நூல்கள்.

'தொல்காப்பியம்' பற்றிய ஐயப்பாடுகளைத் தமிழிய இனச் சார்பாக முடிபு கண்டு தெரிவித்தது, அவர்தம் தமிழ வீறுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு.

குலமுறை ஒழிப்பையும், தமிழ்த் திருமண முறைமையையும், தாம் புரிந்துகொண்ட இரு திருமணங்களின் வாயிலாக இல்லறத்தில் ஏற்றிக் காட்டினவர் நாவலரவர்கள்.

இளமையிலிருந்தே, வ. உ. சி., காந்தியடிகள் முதலானவருடன் தொடர்ந்து இந்திய விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டு வந்தும், நம்மோர் பலரின் அடிமை மூட நிலையில் போலன்றி, தமிழியம் பேணும் காவல் விழிப்புணர்வுடனேயே அதனைச் செய்து வந்தது இவர் மாண்பு.

1938-இல் தோன்றிய தமிழ் மொழி-இன-நாட்டு முந்நிலைக் குறிக்கோள் கொண்ட 'தமிழ்க் கழக'த்தின் தலைமையேற்று, அதன் வழி இந்தி எதிர்ப்பை நடத்தியும் அரும்பணி இயற்றியும் வினையாற்றினார்.

1933 முதல் 1938 வரை அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைப் பொறுப்பேற்று, பல நன்மாணவ மணிகள் தமிழறிஞர்களாக உருவாகும்படி சிறப்புறப் பணியாற்றினுர். நாவலர் அவர்களிடம் பயின்று இன்று தமிழ்த்துறைத் தலைவர்களாகவும், பேராசிரியர் களாகவும், விரிவுரையாளர்களாகவும் உள்ள நூற்றுக்கணக்கான மாணவர்களுள், காலஞ்சென்ற பர். அ. சிதம்பரநாதனுர், பேரா. அ. ச. ஞானசம்பந்தனுர், பேரா. க. வெள்ளைவாரணனுர், பேரா. அ. மு. பரமசிவானந்தம், பேரா. பூ. ஆலாலசுந்தரனுர், பேரா. ச. ஆறுமுகனுர், பேரா. பி. ஆர் மீனுட்சிசுந்தரனுர், பேரா. ஆ. முத்து சிவன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் இருந்தகாலை நாவலரவர்கள் தமிழ் இசை வளர்ச்சிக்கும் அருந்துணை நல்கினுர். அப் பல்கலைக் கழகம், பண்டாரகர்ப் பட்டம் அளித்து நாவலர்பால் தான்பட்ட நன்றிக் கடனைத் தணித்துக் கொண்டது.

விபுலானந்த அடிகளின் அழைப்பிற்கிணங்க இலங்கைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் சென்று தமிழ் மாரி பொழிந்த போதுதான், ஆங்குள்ள புலவர் பெருமக்களால் 'நாவலர்' என்ற பட்டம் சூட்டப் பெற்றுச் சிறப்பிக்கப்பெற்ருர். நாவலரின் குடும்ப வழித் தோன்றல் களான, மகனுர் இலட்சுமிரதன் பாரதி, மகளார் இலக்குமி பாரதி, மருகர் கிருட்டிணசாமி பாரதி, பேரனுர் இலட்சுமிகாந்தன் பாரதி, பேர்த்தியார் மகாலட்சுமி பாரதி ஆகியோர், பொது வாழ்க்கையிலும் அரசு உயர்பணியிலும் மங்காத தமிழ்ப்பற்றுடன் இருந்து வந்ததும் வருவதும் குறிப்பிடத் தகுந்ததாகும்.

நாவலரவர்கள் ஆற்றிய தமிழ்த் தொண்டின் அகலத்தையும் அருமையையும், அவர்பற்றிய வரலாற்று நூலொன்றின் ஆசிரியர்கள் இருவரும் அந்நூலுள், "அஞ்சா நெஞ்சமும், ஆய்வியலறிவும், கலை பயில் தெளிவும், கட்டுரை வன்மையும், உலகியலறிவும், உயர்குண மாண்பும், பன்மொழிப் புலமையும், பாவமை திறனும், நற்றமிழ் நலமும், நா நலப் பேறும் ஒருங்கே பெற்ற உயர் பேராசிரியர்" என்று அவரைப் பாராட்டிக் கூறுவன கொண்டு, தொகுத்துணரலாம். அவற்ருெடு நாம் மேலும் அவரைத் தமிழ் மொழி, இனங் காத்த முன்னணிப் படைஞர் என்றும் போற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

இத்தகைய வீறு படைத்த வாய்மைத் தமிழ் நெஞ்சினுர் இன்று இல்லாமையால், செந்தமிழ் அன்னையும் பைந்தமிழ் நாடும் பழைய படியே காப்பாரற்று நலிவடைந்து வருவது கண்கூடான நிகழ் பாட்டு உண்மை. ஆகலின், நாம், நாவலர் சோமசுந்தர பாரதியாரின் தமிழ்க்காவல் வினை வாழ்க்கை நூற்ருண்டாகிய இவ் வாண்டை, தமிழ் மொழி-இன-நாடு காக்க நாவலிட்டு (வினைக்கழைத்து) அறை கூவும் வினையாண்டாகவே உள்ளங்கொண்டு, உறைந்துவரும் தமிழ்க் குருதி மீண்டும் உருகியோடும்படி, நம் விடிவு நோக்கிச் செயற்படச் சூளுரைத்து ஈடுபடுவோமாக. ○

# உலக இலக்கியங்களும்
# உயர் தமிழ் இலக்கியமும்.

**புலவர். பொன். முகிலன்.** கூவலூர்.

உலகில் இன்று ஏறத்தாழ மூவாயிரம் மொழிகள் உள்ளன. இவற்றில் பேச்சு, எழுத்து ஆகிய இருவழக்கிலும் உள்ள மொழிகள் சில. இச் சில மொழிகளிலும், இலக்கிய இலக்கண வளம் உடையவை மிகச் சில. இவ்விரு வளத்திலும் உயர் தனிச் செம்மை பெற்று விளங்குபவை நனிமிகச் சில. இச் சிலவற்றிலும் தலையாதும், தனிப் பாங்குடையதும் தமிழே! இக்கூற்று உயர்வு நவிற்சி அன்று. உண்மையே என்பதை இனி நோக்குவோம்.

தமிழ் தனித்தியங்கும் ஆற்றலுடைய தூய தனிமொழி. இந்நில முழுதும் விளங்கிய தமிழின் தனித்தன்மையை உணர்ந்து பேணுத தால், தொலைதூர இடைவெளியால், தட்ப வெப்ப மாறுபட்டால், பிற தன்மைகளால் இம்மொழி திரிபுற்றது. இத்திரிபோடு பின்வந்த சமற்கிருதம் போன்ற மொழிகளால் பல மொழிகள் முகிழ்த்தன. அம் மொழிகளைத் 'திராவிடம்' என வழங்குவர். ஆயின், தமிழைக் குறிக்க வழங்கிய, தமிழ் என்னும் சொல்லின் வடமொழித் திரிபே 'திராவிடம்' என்பது. எனவே, அப்பிறமொழித் திரிசொல்லை விடுத்து, இனி 'திராவிட மொழிகள்' என்பதைத் தமிழின மொழிகள் என வழங்குவோம்.

கால்டுவெல் காலத்தில், அவர் கண்டறிந்து கூறிய தமிழின மொழிகள் ஆறு. ஆயின், இன்று தக்க ஆய்வின் மூலம் தமிழின மொழிகள் இருபத்தைந்து என அறியப்பட்டுள்ளது. இவ்விருபத் தைந்தையும் தென்பகுதித் தமிழின மொழிகள், நடுப்பகுதித் தமிழின மொழிகள், வடபகுதித் தமிழின மொழிகள் மேலைநாட்டுத் தமிழின மொழிகள் எனப்பாகுபடுத்துவர். இவை முறையே 8, 12, 3, 2 ஆகிய எண்ணிக்கைகளைக் கொண்டவை.

இவற்றில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கும் பழைய இலக்கிய இலக்கண வளம் உடையவை. மேலை நாட்டுத் தமிழின மொழிகளான 'பாசுகு' மொழியும், செனகால் (உலாப்) மொழியும் இலக்கிய இலக்கண வளம் உடையவையாய் இருக்கக்கூடும். அவற்றின் இலக்கியங்கள் பற்றிய தெளிவான செய்திகள் இன்னும் கிடைக்கவில்லை.

மேலைநாட்டுத் தமிழின மொழிகளாக அறிஞர் சிலர் பல்வேறு மொழிகளைக் குறிப்பிடுகின்றனர். அவற்றில் மேற்குறித்த இரு மொழி களிலும் தக்கவாறு ஆய்வு செய்யப் பட்டுள்ளதோடு மேலும் ஆய்வு நிகழ்ந்து வருகிறது. இந்த இருபத்தைந்தும் இன்றும் வாழும் மொழிகள்.

சுமேரியம் போன்ற வாழ்ந்து மறைந்த சில மொழிகளிலும் தமிழினக் கூறுகள் உள்ளன. விரிந்த, ஆய்ந்த ஆய்வின்வழி

இவையும் தமிழின மொழிகளே என்பதைக் காணலாம். குமரி என்ற சொல்லே சுமரி, சுமேரி என ஆயிற்றென்பதும்; குமரிநில மொழியாகிய தமிழும், சுமரி மொழியாகிய சுமேரியமும் ஓரின மொழியே என்பதும்; பண்பாடு, நாகரிகம், கலைகள் ஆகியவற்றிலும் இவை ஒற்றுமையுற்றுத் திகழ்கின்றன என்பதும் இன்றைய ஆய்வின் வழி புலனுகின்றன. எனவே, தமிழின மொழிகளில் வாழும் மொழிகளும் உள்ளன. வாழ்ந்து மறைந்த மொழிகளும் உள்ளன. இவற்றையும் சேர்த்துக் கணக்கிட்டால் தமிழின மொழிகள் மேலும் பலவாகப் பெருகும் என்பதை உளங்கொள்க. மேலைநாட்டுத் தமிழின மொழிகள் நீங்கலாக உள்ள மொழிகளில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்குமே இலக்கிய இலக்கணச் சிறப்பு உடையவை.

இன்று உலக மொழியாய்த் திகழும் ஆங்கிலம் கி.பி. 5-ஆம் நூற்ருண்டில் அரும்பி கி.பி. 8-ஆம் நூற்ருண்டில் மலர்ந்தது. இன்று உலகிற்சிறந்த இலக்கியங்கள் எல்லாம் உள்ள மொழியாக இருப்பது ஆங்கிலம். ஆனுல், கி.பி. 1066-ஐ ஒட்டிய காலப்பகுதியில் நாகரிகமற்றவர்களின் மொழி என்றும், நாகரிகமானவர்கள் பேசுவதற்குத் தகுதியற்ற மொழி என்றும் நார்மன் மக்களால் எள்ளி நகையாடப் பட்ட மொழி ஆங்கிலம். கி.பி. 15, 16ஆம் நூற்ருண்டில் இலக்கியம், மெய்ப்பொருள், அறிவியல் போன்ற துறைகளின் மொழியாக இருப்பதற்குத் தகுதி உடையதுதானு என ஆங்கிலேய மக்களாலேயே கேட்கப்பட்ட மொழி ஆங்கிலம். கி.பி. 17, 18-ஆம் நூற்ருண்டுக் காலத்திலும்கூட இலக்கணங்கள் இல்லையே, வரன் முறை இல்லையே, குறையற்ற எழுத்துமுறை இல்லையே, என அறிஞர்கள் அரற்றி நின்ற நிலையில் இருந்த மொழி ஆங்கிலம்.

இன்றைய உலக மொழியின் அன்றைய நிலை இவ்வாறு இருக்க, தமிழின மொழிகளில் இறுதியாய்த் தமிழை விட்டுப் பிரிந்த மலையாள மொழியின் முதல் இலக்கியம் கி.பி. 12-ஆம் நூற்ருண்டில் தோன்றியது. 'இராமசரிதம்' என்பதே அவ்விலக்கியம். கி.பி. 1195 முதல் 1208 வரை திருவிதாங்கூர்ப் பகுதியை ஆண்ட மன்னன் வீரராமவர்மாவால் இது இயற்றப்பட்டது என்பர். மலையாள மொழியின் முதல் இலக்கியமான இந்த இராமசரிதம் இக்கால மலையாள மொழி பேசும் மக்களைவிடத் தமிழ் பேசும் தமிழர்கள் எளிதில் புரிந்துகொள்ளும்படி அமைந்துள்ளது. இதுவே, முதல் மலையாள இலக்கியத்தின் முதன்மைச் சிறப்பு.

அடுத்து, மேலைநாட்டு மொழிகள் பலவற்றைத் தோற்றுவித்த செர்மன் மொழியை நோக்குவோம். கி.பி. 16, 17-ஆம் நூற்ருண்டில் இலத்தீனே பாடம் கற்பிக்கும் மொழியாக இருக்கத் தகுதியுடையது என்றும், செர்மன் மொழிக்கு அத்தகுதி இல்லை என்றும் கூறப் பட்டது. அந்தச் செர்மன் மொழிதான் இன்று அறிவியல் மொழி

யாகப் போற்றப்படுகிறது. இம்மொழியில் இலக்கியங்களும், பிற துறைகளும் 18-ஆம் நூற்றுண்டில்தான் பிறந்து வளர்ந்தன.

தமிழின மொழியில் மராட்டியம், குச்சரம் ஆகிய பகுதிகளிலும் அன்று சிறந்து வாழ்ந்த கன்னடம் பின் தென்பகுதியில் சுருங்கி இன்று கருநாடக மாநிலத்தில் மேன்மையுற்றுத் திகழ்கிறது. இக் கன்னட மொழியின் முதல் இலக்கியம் கி.பி. 9-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தது நிருபதுங்க மன்னனின் (கி.பி. 814-877) அரசவையில் இருந்த சிரிவிசயன் என்பார் எழுதிய அந்நூல் கவிராச மார்க்கம் என்பது. இந்நூல் கன்னட மொழியினரின் பா இயற்றும் ஆற்றல் பற்றியும், கன்னட மொழி பற்றியும் பெருமையுறக் கூறுகிறது.

தனக்கென ஓர் இலக்கிய மொழியைக் கி.பி. 19-ஆம் நூற்றுண்டில் வகுத்த உருசியன் மொழி இன்று உலக மொழிகளில் ஒன்றுகத் திகழ்கிறது. இம்மொழியில் இலக்கியமும் பிறவும் 19-ஆம் நூற்றுண்டில்தான் பிறப்பெடுத்தன என்பதை இயம்பவும் வேண்டுமோ? பேரரசன் பீட்டரின் காலத்தில் வெறும் பேச்சு மொழி யாக மட்டுமே இருந்தது இம்மொழி.

காலப் பழமையில் மிகப் பிந்திய உருசிய மொழி அம்மொழி பேசுவோரின் கருத்தாலும், பற்றுலும், கடமைச் சிறப்பாலும் இன்று உலக மொழியாய் உயர்ந்து நிற்கிறது. ஆயின், கி.மு. நூற்றுண்டு களிலேயே தெலுங்கு மொழி பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. என்றுலும், இதன் முதல் இலக்கியம் கி.பி. 1020-ஐ ஒட்டிய காலத்தில் தான் தோன்றியுள்ளது. நன்னய்யாவின் பாரதமே தெலுங்கு மொழியின் முதல் இலக்கியம்.

இராசமுந்திரியைத் தலைநகராக் கொண்டு ஆந்திர நாட்டை ஆண்டுவந்த கிழக்குச் சாளுக்கிய மன்னனுன இராசராச நரேந்திரனின் (கி.பி. 1022—1063) வேண்டுகோளுக் கிணங்கி நன்னய்யா என்பார் இந்நூல் இயற்றினுர் என்பர்.

மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளின் அடிப் படைச் சொற்களெல்லாம் தமிழே. தமிழ்மொழியில் இன்று வழக் கத்தில் இல்லாத சில மூலச் சொற்களைக்கூட இம்மொழிகள் இன்னும்- இன்றும் காத்து வழங்கி வருகின்றன.

இம்மொழிகளின் பிற சொற்களில் பிராகிருதமும், சமற்கிருதமும் இடம் பெற்றிருக்கும். இவற்றில் சமற்கிருதமே தமிழினம் அல்லாதது. பிராகிருதம் என்பது வட தமிழ் எனத்தக்க தமிழின மொழியே. முந்திச் செய்யப்பட்டது என்னும் இம்மொழியின் பெயரே, சமற் கிருதம் எத்துணைப் பிந்தியது என்பதற்குச் சான்றுகும். தமிழ் சமற் கிருதத்திற்கு ஊழி, பேரூழிக்கணக்கான முற்பட்ட மொழி. அத்துடன் அஃது ஆரிய இன ஊழிக்கு முற்பட்டே உயர் நாகரிக வாழ்வும் உடையது.

உலகில் பழமை வரலாறும், இலக்கியச் சிறப்பும் கொண்ட மொழிகள் தமிழ், சீனம், வடமொழி, எகிப்து, கிரேக்கம் என்பன. இவற்றில் தமிழும் சீனமுமே வாழும் மொழிகள். பின்னுள்ள மூன்றில் வடமொழி என்றும் மக்கள் நாவில் வழங்காத முழுச் செயற்கை மொழி. எகிப்தும், கிரேக்கமும் சிறந்து வாழ்ந்த மொழிகள். சீன நாடு முழுதும் பேசப்படும் மொழி சீனம் எனப் பொதுவாக வழங்கினும் சீன மொழி என்பது ஒரே மொழியன்று. சீனத்தில் ஒரு பிரிவினரை ஒரு பிரிவினர் புரிந்து கொள்ள முடியாத அளவுக்குக் கிளை மொழிகள் உள்ளன. இவற்றை, மாண்டரின் (**Mandarin**) ஊ (**Wu**) பியூக்கின் (**Fukien**) கக்கா (**Hakka**) கேன்டோனெசு (**Contonese**) என்பர். இவை ஒவ்வொன்றையும் தனித்தனி மொழியாகக் கொள்வர். சீன மொழியின் முதல் இலக்கியம் கன்பூசியசால் தொகுக்கப்பட்ட தொகை நூல். இஃது ஐந்து தொகுதிகளை உடையது. 1. மாற்றத் தொகுதி (யி-கிங்) 2. வினைமுறைத் தொகுதி (லி-சி) 3. வரலாற்றுத் தொகுதி (சூ-கிங்) 4. பழம்பாடல் தொகுதி (சி-கிங்) 5. தென்றலும் வாடையும் (சுன்-இட்சு). இதன் காலம் கி.மு. 3000 முதல் கி.மு. 600 வரை. கன்பூசியசு கி.மு. 600-ஐ ஒட்டி வாழ்ந்தவர்.

தமிழில் இப்போது கிடைத்தவற்றுள் முதல் இலக்கியம் சீனத்தைப் போல தொகை நூலே. இத்தொகை நூலில் உள்ள பாக்களும் கி.மு. 3000 தொடங்கி உள்ளன. பர். இலக்குவனாரின் கருத்துப்படி கி மு. 5000 ஆண்டுகளுக்கு முந்திய பாக்களும் எட்டுத் தொகை நூல்களில் இடம் பெற்றுள்ளன.

இக்கூற்றிற்கு இணையற்ற சான்றாய் இலங்குவது தொல்காப்பியம். மேலையுலகின் மொழியியற் பேரறிஞர்கள் எல்லாம் வியந்து போற்றும் தொல்காப்பியம் இடைக் கழகக் காலத்திலேயே தோன்றியிருக்குமாயின், இவ்விலக்கணத்தைத் தோற்றுவித்த தொல் தமிழ் இலக்கியங்கள் எத்துணைச் செப்பமும் செம்மாந்த போக்கும் உடையதாய் இருந்திருக்க வேண்டும்? எண்ணிப் பாருங்கள்!

மேலும், கிரேக்கம், இலத்தீன், அரபு, எபிரேயம், சமற்கிருதம் போன்ற எல்லா உலக மொழிகளிலும் இலக்கணம் என்பது வெறும் மொழி இலக்கணத்தை மட்டுமே குறிக்கும். இம்மொழிகளில் தோன்றிய இலக்கணங்கள் எல்லாம் பிற மொழித் தொடர்பால் ஏற்பட்டவையே. மொழி கற்பவருக்கு ஒரு துணைக் கருவியாக மட்டும் பயன்படும் நோக்கில் எழுந்தவையே உலகில் பல மொழிகளின் இலக்கணங்கள்.

ஆயின், தமிழில் இலக்கியம் என்பது மொழிக்கும் இலக்கியத்திற்கும் உரியது. உலக வழக்கும், செய்யுள் வழக்கும் இலக்கணத்திற்கு இலக்கியமாகக் குறித்த இலக்கண மரபு உலகில் தமிழ் இலக்கண மரபு ஒன்றே. தமிழில் உள்ள பொருளிலக்கணம் முற்றிலும் இலக்கணத்தை (வாழ்வை)க் கூறும் இலக்கிய இலக்கணமேயன்றி, மொழி இலக்கணமன்று.

இத்தகைய கருத்தோடு நனிமிகத் தொன்மையான தொல்காப்பியத்தை நோக்குக. சிறந்திலங்கும் இவ்விலக்கணத்தை உருவாக்கியவை இதற்குமுன் எழுந்த தமிழ் இலக்கியங்களே என்பதும், உலகின் மற்றைய மொழிகளைப் போல பிற மொழித் தொடர்பன்று என்பதும் புலனுகும்.

இனி, வட மொழியின் முதல் இலக்கணமான பாணிணியத்தைச் சிறிது நோக்குவோம். பாணினியம் என்பது வெறும் மொழி இலக்கணம்; அதுவும் சொல்லிலக்கணம். பாணினியின் காலத்தில் 'வேத உபநிடதங்கள்' தவிர வடபுலத்தில் எச்சிறு இலக்கியமும் கிடையாது. இலக்கிய மொழியாகிய சமற்கிருதம் அன்று பிறக்கவும் இல்லே. பாணினியின் இலக்கணம் சமற்கிருதத்தின் இலக்கணமாகக் கருதப்பட்டாலும், சமற்கிருதம் என்ற பெயரே அவர் காலத்தில் இருந்ததில்லே. பாணினியின் இலக்கணத்தைப் பின்பற்றி சமற்கிருதம் வளர்ந்தது உண்மையாயினும், பாணினி இலக்கணம் எழுதியது சமற்கிருதத்திற்குமன்று. சமற்கிருதத்திலுமன்று. அவர், தம் இலக்கணத்திற்குரிய மொழியைப் 'பாசா' என்றே குறிப்பிட்டுள்ளார். இது கீர்வாணம் என்னும் வேத மொழிக்குப் பிறபட்டது. சமற்கிருதத்திற்கு முற்பட்டது. சமற்கிருதத்தின் தாய் மொழியான 'பாசா' மொழி ஒரு பாகத மொழியாகும். இதுவே, பின்னுளில் இலக்கிய மொழியாக—சமற்கிருதமாக வளர்ந்தது.

எனவே, காலநீட்சி, பழமை, இன்றை வாழ்வு போன்ற வகைகளில் உலகில் தமிழுடன் ஒப்புடைய ஓரே மொழி சீனம் ஒன்றே. தொல்காப்பியத்தின் வழி, கன்பூசியசு தொகுத்த முதல் சீன இலக்கியத்திற்கும், தமிழ் இலக்கியம் முற்பட்டது என்பது தெற்றெனப் புலனுகின்றது. அடுத்து, அங்கு தன் தகுதிக்கு மீறிப் போற்றப்பெறும் வடமொழி இலக்கியங்கஊ நோக்குவோம். வடமொழி என்ற சொல் வேத மொழி, சமற்கிருதம் ஆகிய இரண்டையும் குறிக்கும். இதில் முந்தியது வேத மொழி. இது பல்லாண்டுகள் வெறும் பேச்சு மொழியாக மட்டுமே இருந்தது. வேத மொழியில் உள்ள எந்த நூலுக்கும் இலக்கியம் என்ற பெயர் கிடையாது. இதிலுள்ளவற்றுக்கெல்லாம் சமய நூல்கள் (சாத்திரங்கள்) என்று மட்டுமே பெயர். இலக்கியம் என்ற நோக்கில் வேத மொழி எப்பயனும் அற்றது. எவ்விலக்கியமும் இல்லாதது. தம் வேத மொழியோடு, தமிழையும், முன்னைத் தமிழின மொழிகளையும் (வடதமிழ் எனப்படும் பிராகிருதம் முதலியவற்றையும்) கலந்து திருத்தப்பட்ட, செப்பம் செய்யப்பட்ட மொழியே சமற்கிருதம் வால்மீகியையே இம்மொழி தன் முதற்பாவலனுய்க் (ஆதிகவியாய்க்) குறிப்பிடுகிறது. வால்மீகி கி.மு. 2-ஆம் நூற்றுண்டில் இருந்தவர். எனினும் சமற்கிருதத்தின் முதல் இலக்கியப் பாவலன் என்னும் சிறப்பைப் பெறுபவன் அசுவகோசனே. இவனது காலம் கி.பி. 1 அல்லது 2-ஆம் நூற்றுண்டு.

(சமற்கிருதத்தின் சிறந்த-மூதன்மையான இலக்கியப் பாவலன் காளிதாசன். இவனது காலம கி.பி. 5-ஆம் நூற்றுண்டு).

அடுத்து, எகிப்து மொழியோ கல்வெட்டுகளிலும் பாப்பிரசுச் சுருள்களிலுமே வாழும் பழைய மொழி. நீலாற்றங்கரையில் இம் மொழி வளர்த்த பண்பாடும் நாகரிகமும் இன்று தொல்லியல் பொருள் களாகத்தான் எஞ்சியுள்ளன. கிரேக்க மொழி வளர்த்த நாகரிகமும் இலக்கியமும் இன்று மறைந்து போயினும், மேலையுலகின் மலர்ச்சிக்கு உள்ளுரமாய், அடியுரமாய் விளங்கியது கிரேக்கமேயாகும்.

எனவே, உலகின் எமமொழி இலக்கியத்தை நோக்கினும், உலக இலக்கியங்களுக்கெல்லாம் வழிகாட்டும் உயர்தனிப் பண்பாட்டை உடையனவாயும், இந்நாட்டின்-இவ்வுலகின் முதற்பேரிலக்கியமாயும், தனித்தியங்கவல்ல தனித்தமிழ்ச் சோலையாயும், அளவில்-உலகில் பல மொழிகளின் முழு இலக்கியத்துடனும் ஒப்பிடத்தக்கனவாயும் உள்ள ஒரே இலக்கியம் தமிழ்க் கழக(சங்க) இலக்கியங்களேயாகும். தமிழின் இடைக்கால பிற்காலங்களுக்குரிய முதல் நூல்கள் கூட உலகின் பிற முதன்மை வாய்ந்த இலக்கிய முதல் நூல்களுக்கு ஈடு செலுத்தக் கூடியவையே.

இன்றைய அறிவியல் மேதைகளுக்கு எவ்வகையிலும் குறை விலா ஆற்றல் படைத்தவர்கள் கழகப் புலவர்கள் அவர்கள் இயற் கையின் பொதுப் பண்புகளைக் கூறி இடம் அடைப்பதில்லை. பாலை நிலச் செடிகளின் இலையற்ற பால் செறிந்த தன்மை, நீர்வாழ் செடி களின்-இலைகளின் அடிப்புறக் கருமை, இலைகளின் நுட்ப வடிவங்கள், தன்மைகள், காயாமரம், பூவாச்செடி, பறவைகளின் சிறப்புப் பண்புகள், விலங்குகளின் வியப்பமை இயல்புகள் ஆகியவற்றையே அடை மொழியாகக் கூறியுள்ளனர். கவின் கலையான இலக்கியக் கலையிலும் அறிவுத் திறத்தையும் பயனையும் தந்துள்ளனர். இலக்கியங் களையும் அறிவியல் அடிப்படையிலான வாழ்வுக் கலையாக்கி வழங்கி யவர் கழகப் புலவர்.

இங்கிலாந்தில் டென்னிசன் பாக்களில் காணும் அறிவியல் வாய்மையையும், பிரௌனின் பாக்களில் காணும் வரலாற்று நோக் கையும், மெய்விளக்க வாய்மையையும், இசுக்காந்திநேவிய, உருசிய இலக்கியங்களில் காணும் வாழ்க்கை உண்மைகளையும், பிரெஞ்சு, கிரேக்க இலக்கியங்களின் கட்டமைப்புக் கலையாண்மையையும் கழக இலக்கியங்களில் ஒருங்கே காணலாம்.

இறுதியாகத் தமிழ்க் கழக இலக்கியங்கள் கடைப்பிடித்த திணை மரபின் இணையிலா நனி சிறப்பை நினைப்போம். திணைமரபாகிய இயற்கைப் படப்பிடிப்பிற்குத் தனித்தமிழ்க் கழக இலக்கியமே உலகின் தலையாய முதல் எடுத்துக் காட்டாகும்.

கிரேக்கரின் முல்லைத்திணை இலக்கியத்தை ஆயிரம் ஆண்டு களுக்குப் பின் கண்டு அதனுல் மறுமலர்ச்சியுற்றது மேலையுலகு.

# தமிழ்த் தாயே சொல்கிருளாம்!

—தமிழவேள்.

'தமிழ்த்தாய்-தன் மக்களைப் புதிய சாத்திரம் வேண்டுதல்' என்னும் தலைப்பில் பாரதியார் பாடல் ஒன்று உள்ளது. தமிழ்த்தாய் தன் மக்களைப்பார்த்துச் சொல்வதுபோல் எழுதப் பட்டியிருக்கிறது அந்தப் பாடல்.

தமிழ்த்தாய் சொல்கிருளாம்: "எல்லா வற்றிற்கும் முதலாக இருக்கின்ற சிவ பெருமான் என்னைப் பெற்றுவிட்டான். ஆரிய மைந்தன் அகத்தியன் என்னும் வேதியன் என்னைக்கண்டு மகிழ்ந்து எனக்கு நிறைவுடைய இலக்கணம் ஒன்றைச் செய்து கொடுத்தான். சேர சோழ பாண்டியர் என்னும் மூன்று மன்னர்கள் என்னை மிகுந்த நல்லன்போடு நாளும் வளர்த்தார்கள். சிறந்த மொழிகளுக்குள் உயர்ந்ததான ஆரிய மொழிக்கு நிகராக நான் வாழ்ந்தேன்.

"ஆதிசிவன் பெற்றுவிட்டான்—என்னை
ஆரியமைந்தன் அகத்தியன் என்ரோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே—நிறை
மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்!

மூன்று குலத் தமிழ் மன்னர்—என்னை
மூண்ட நல்லன்போடு நித்தம் வளர்த்தார்
ஆன்ற மொழிகளினுள்ளே—உயர்
ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்!"

தமிழ்த்தாய் சொல்வதாகப் பாரதியார் சொல்கின்ற கருத்துகள் இவை.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

தமிழரின் முழுத்திணை (ஐந்திணை) இலக்கியத்தின் உயர்வு காணில் (இன்னும் கழக இலக்கியக் கவின் சிறப்பு தக்கவண்ணம் மேலையுலகிற்கு உணர்த்தப் பெறவில்லை.) மேலும் பாரிய மறுமலர்ச்சிப் புரட்சிக்கு ஆளாகும். அதன் வழியாவது இத்தமிழகத்தில் தக்க மலர்ச்சியும், புரட்சியும் மலரட்டும்.

**கருவி நூல்கள்:**

திரு. **கா. அப்பாத்துரை** அவர்கள் எழுதிய 1. தென்மொழி 2. உலக இலக்கியங்கள் 3. சங்க இலக்கிய மாண்பு.

திரு. **ச. அகத்தியலிங்கம்** அவர்கள் எழுதிய 1. உலக மொழிகள் (5 பாகங்கள்.)

திரு. **சி. சான் சாமுவேல்** அவர்கள் எழுதிய 1. திராவிட மொழிகளின் ஒப்பாய்வு. மற்றும் **தென்மொழி, செந்தமிழ்ச் செல்வி** இதழ்கள்.

முழுமுதற் கடவுளான சிவபெருமான் தமிழைப் பெற்றெடுத்தானும்! ஆரிய மொழியாகிய வடமொழியை யார் பெற்றெடுத்ததோ தெரியவில்லை!

“நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமானும் தமிழ்க்கழகத்தில் தமிழ்ப்புலவர்களோடு அமர்ந்து ஆராய்ந்த பைந்தமிழ் எங்கள் தமிழ்” என்கிறார் பரஞ்சோதி முனிவர்.

“கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந்தமிழ்.”
—திருவிளையாடற் புராணம்.

ஆனால் பாரதியாரோ சிவபெருமான் பெற்றெடுத்த தமிழ் என்கிறார்.

சிவபெருமான் பெற்றெடுத்த தமிழை ஒருவன் கண்டானும். கண்டு மகிழ்ந்தானும், யார் அவன்? அவன் ஓர் ஆரிய மைந்தனும். அவன் பெயர் அகத்தியனும். அவன் ஒரு வேதியனும். சிவபெருமான் பெற்றெடுத்த தமிழைக்கண்டு அவன் மகிழ்ந்து நிறைவுடைய ஓர் இலக்கணத்தைச் செய்து கொடுத்தானும். தமிழுக்கு இலக்கணம் தமிழ் மைந்தன் எவனும் செய்ய வில்லையாம். ஆரிய மைந்தன்தான் செய்தானும். அவனும் ஒரு வேதியனும்.—பாரதியார் சொல்கிறார்.

அகத்தியர் என்று ஒருவர் இருந்தார் என்பதும் அவர் தமிழுக்கு அகத்தியம் என்றோர் இலக்கணம் வகுத்தார் என்பதும், அவர் தொல்காப்பியரின் ஆசிரியர் என்பதும் எல்லாம் கட்டுக் கதைகளே! “மிக தெளி கேள்வியும் மேதகு புலமையும் மகத்துவ மிகுதியும் உடைய ஆசிரியர்” என்று அகத்தியரைக் பாராட்டி எழுதுகின்றவர்களே, “அகத்தியம் என்கின்ற இலக்கண நூலைப்பற்றி இப்போது நாம் கேள்விப்படுவதைத் தவிர அதிகமாக எதையும் தெரிந்து கொள்ள முடியவில்லை.” என்கிறார்கள். அகத்தியர் என்று ஒருவர் இருந்து அவர் அகத்தியம் என்ற இலக்கண நூலை இயற்றியிருந்தால் அந்த நூலை எவ்வளவோ கண்ணுங்கருத்துமாகக் காத்து வந்திருப்பார்களே தமிழ்ப்பகைவர்கள்! தனித்தமிழ் நூல்களை அழிப்பதும் வடமொழி நூல்களையும் வடமொழிக் கொள்கையைத் தழுவிய நூல்களையும் காப்பதும்தானே அவர்கள் நெடுங்காலமாகச் செய்து வருகின்ற தொண்டு!

எடுத்துக்காட்டுக்கு ஒன்றைச் சொன்னால் போதும். தஞ்சை மா நகரில் சரசுவதி மகால் நூல் நிலையம் என்று ஒரு நூலகம் இருக்கின்றதே. அந்த நூலகத்தில் தமிழ்ச்சுவடிகளையும் சமற்கிருதச் சுவடிகளையும் திரட்டி வைத்திருக்கிறார்கள். அப்படித் திரட்டிவைக்கப் பட்டிருக்கும் தமிழ்ச்சுவடிகளின் எண்ணிக்கை 2081 தான். வடமொழிச் சுவடிகளின் எண்ணிக்கையோ 30,377. தமிழ்ச் சுவடிகளின் எண்ணிக்கையைப்போல் 15 மடங்கு சமற்கிருதச் சுவடிகள் திரட்டிவைக்கப் பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டில் தமிழ் மக்கள் வாழ்கின்ற தமிழ் நகரில் உள்ள நூல் நிலையத்தில் தமிழ்ச் சுவடிகள்

மிகுதியாக இல்லையென்றால் அஃது எதைக்காட்டுகிறது? தமிழ்ப்பகை அவ்வளவு திறமையாகச் செயல்பட்டு வருகிறது என்பதைத்தானே? தமிழர்கள் அவ்வளவு ஏமாளிகளாக இருக்கிறார்கள் என்பதைத் தானே?

தமிழுக்கு முதன் முதல் இலக்கணம் வகுத்தவன் ஒரு தமிழனாக இருக்கவேண்டுமே தவிர ஆரியனாக இருக்கமுடியாது, கட்டுக்கதையாகச் சொல்வதுபோல் அகத்தியன் என்றோர் ஆரியன் இருந்து அவன் தமிழுக்கு இலக்கணம் செய்திருந்தாலும் அது வடமொழி முறைமைக்கு ஒப்பத் தமிழிற் செய்யப்பட்டிக்க வேண்டுமே தவிர தமிழ் மரபுக்கு ஏற்பச் செய்யப்பட்டிருக்க முடியாது.

ஆனால் பாரதியார் சொல்கிறார், தமிழுக்கு இலக்கணம் செய்து கொடுத்தவன் அகத்தியர் என்னும் ஆரியவேதியன்தான் என்று! அந்த அளவோடும் அவர் நிற்கவில்லை. மேலும் சொல்கிறார், முழுமையான சிறந்த மொழிகளுள் உயர்ந்த மொழி ஆரியமாம். அந்த ஆரிய மொழியாகிய வடமொழிகளுக்கு நிகராகத் தமிழ் மொழி வாழ்ந்ததாம். அவ்வாறு சொல்வதன் மூலம் பாரதியார் இரண்டு தவறான கருத்துகளை—இரண்டு பொய்யான தகவல்களைத் தமிழர்களிடையே புகுத்துகிறார். ஒன்று, உலகத்திலுள்ள முழுமையான சிறந்த மொழிகளுக்குள் வடமொழியே உயர்ந்த மொழி என்பது. இரண்டு, தமிழ் மொழி பிறந்து வளர்வதற்கு முன்னமே வடமொழி வாழ்ந்திருந்தது என்பது. முடியுடை மூவேந்தர்கள் அன்போடு வளர்த்த தமிழ் உயர்ந்த மொழியான வடமொழிக்கு நிகராக வாழ்ந்தது என்றால் தமிழ்மொழிக்கு முன்னமே வடமொழி இருந்தது என்றுதானே பொருள்?

உலகில் முதன் முதலில் மக்கள் தோன்றிய இடம் தமிழகம்தான் என்பது நில நூல் ஆராய்ச்சியாளர்கள் கண்ட முடிவு. எனவே மக்கள் முதல் முதல் பேசிய மொழி தமிழாகத்தான் இருக்கவேண்டும். தமிழகத்தில் பெருகி வாழ்ந்த மக்கள்தாம் கடல் கோள்கள் ஏற்பட்டதால் உலகில் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று குடியேறினர். ஆகவே உலக மக்களின் முதல் தாய் மொழி தமிழே. இன்று உலகில் வழங்கிவரும் எல்லா மொழிகளுக்கும் தாய் மொழியும் தமிழே. ஆரியம் என்னும் வடமொழிக்கும் தாய் மொழி தமிழ்தான். இதனைக் கணியர், பண்டாரகர் இ.மு. சுப்பிரமணியம் என்னும் தமிழ்ப் பெரும் புலவர் மிக அழகாகச் சொல்கிறார்.

"பூவுலகில் முதல் முதல் மக்கள் தோன்றியது தமிழகமே என்பது உலக ஆராய்ச்சிப் பெரும்புலவர்களால் ஒப்ப முடிந்த உண்மை. ஆதலின் மக்கள் முதல் முதலாகப் பேசிய மொழி நம் தெய்வத்தமிழ் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். தமிழகத்திலிருந்து பல்கிப்பெருகி மக்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் சென்று குடியேறியவராவர் ஆதலின் உலகத்தாய்மொழி தமிழ்தான் என்பது நிலை

பெறும். ஆரியம் எனப்படும் வடமொழி முதலில் பல்வேறு மொழிகளுக்கும் தாய்மொழி தமிழ்மொழி தான்'' என்கிறார்.

மொழிப் பேரறிஞர். ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களும் இதனையே வலியுறுத்திச் சொல்கிறார். ''தமிழும் தமிழரும் தோன்றியது மாந்தன் முதன் முதல் தோன்றிய குமரி நாடே என்பதும், குமரி நாட்டார் வடக்கே செல்லச் செல்லத் தமிழ் முதலாவது திராவிடமாயும் பின்பு ஆரியமாயும் திரிந்ததென்பதும், ஆரியர் தமிழகத்துக்கு வருமுன்பே தமிழர் பிற துறைகளிற் போன்று மொழியிலும் தலைசிறந்திருந்தனர் என்பதும், பண்டைத் தமிழ் நூல்கள் எல்லாம் தனித்தமிழ் நடையினவே என்பதும், பிறவும் மொழி நூலார் கண்ட உண்மைகளாம்.'' என்கிறார்.

தமிழ் மொழி எப்போது தோன்றியது என்று வரையறுத்துச் சொல்ல முடியாத அளவு தொன்மையுடையது.

திரு. ஆ. கார்மேகம் என்னும் தமிழ்ச்செல்வர் இதனை இப்படி விளக்குகிறார். ''தொல்காப்பியத்தில் பலவிடங்களிலும் 'என்ப' 'என்மனார் புலவர்' என்பன போன்ற சொற்களையும் தொடர்களையும் தொல்காப்பியர் வழங்கியிருக்கிறார். அந்நூலில் ஒரு தொடர், ''தோலெனமொழிப தொன்மொழிப் புலவர், என்பது. தொல்காப்பியர் தமக்கு முன்னிருந்த ஆசிரியர்களைக் கூற வந்த விடத்து தொல் என்னும் அடைமொழியைத் தமிழ் மொழிக்கு இட்டு அம்மொழியில் வல்லாரென்று பேணி, அவரைத் தொன்மொழிப்புலவர் என்பாரானால், அவர்காலத்திற்கு முன்னர் தமிழ் மொழி எவ்வளவு தொன்மையாயிருந்திருக்கிறது என்பது தெளிவாக விளங்குமல்லவா? மிகப் பழைய காலத்தவர் என்று கருதப்படும் தொல்காப்பியர் காலத்துக்கே தமிழ் மொழி தொன்மொழியானால், நம்முடைய காலத்துக்கு அது எத்துணைத் தொன்மையுடையதாய் இருத்தல் வேண்டும்; இதனால் தமிழ் இவ்வளவு பழைமையது என்று வரம்பறுத்துரைத்தலே இயலாது போதல் காண்க'' என்கிறார்.

இந்தியநாடு முழுவதுமே ஒரு காலத்தில் பரவியிருந்த மொழி தமிழ்தான் என்பதை பேராசிரியர். இரா. பி. சேது அவர்களும் சொல்கிறார். ''முன்னொரு காலத்தில் இமயம் முதல் குமரிவரை தமிழ் மொழியே பரவியிருந்தது என்பது தக்கோர் கருத்து. அந்நாளில் கங்கை நாட்டிலும் காவிரி நாட்டிலும் தாளாண்மையுடைய தமிழர் வேளாண்மை செய்தனர். வளம் பெருக்கினர். அறம் வளர்த்தனர். கங்கைத் திருநாட்டில் பயிர்த்தொழில் செய்த வேளாளர் இன்னும் தமிழகத்தில் கங்கை குலத்தவர் என்றே கருதப்படுகின்றார்கள். எனவே பழங்காலத்தில் பாரதநாடு முழுவதும் தமிழகமாகவே விளங்கிற்று,'' என்று. ''தமிழகம் ஊரும் பேரும்'' என்னும் தம்முடைய நூலில் குறிப்பிடுகிறார்.

இந்த உண்மையை நன்குணர்ந்தே "மனோன்மணீயம்" ஆசிரியர் சுந்தரம் அவர்கள் பாடுகிறார்.

"சதுமறை ஆரியம் வருமுன்னர் சகமுழுதும் நினதாயின்
முதுமொழி நீ அனாதியென மொழிகுவதும் வியப்பாமே!"

நான்குமறைகளை உடையதாகச் சொல்லப்படும் ஆரியமொழி தோன்றுவதற்கு முன்னர் இந்த உலகம் முழுவதுமே உன்னுடையதாக இருந்தது என்றால், தமிழே! நீ எவ்வளவு பழைமையான மொழி உன்னுடைய தோற்றத்தை யாராலும் கண்டு சொல்ல முடியவில்லை! என்ன வியப்பு!" என்று பாடுகிறார்.

"பல்லுயிரும் பல உலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன்னதரத்(து) உதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்
ஆரியம்போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையாஉன்
சீரிளமைத்த திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!"

"பல உயிர்களையும் பல உலகங்களையும் படைத்துக்காத்து அழித்து வந்தாலும் எல்லையற்ற பரம் பொருளானது, முன்னால் இருந்த படியேதான் இருக்கிறது. அதுபோல் கன்னடமும் தெலுங்கும் மலையாளமும் துளுவும் உன் வயிற்றில் தோன்றி ஒன்று பலவாக விளங்கிடினும், ஆரிய மொழியைப்போல் உலக வழக்கிலிருந்து அகன்று இறந்து சிதைந்து போகாமல் இருக்கும் உன் சிறந்த இளமைத் திறத்தைத் தமிழ் அணங்கே! வியந்து பாராட்டிச் செயல் மறந்து வாழ்த்துகிறோம்." என்று பாடுகிறார்.

ஆனால் பாரதியாரோ தமிழனுக்கு முன்னமே ஆரிய மொழி இருந்தது போன்ற பொய்யான—தவறான—கருத்தை வைத்துப் பாடுகிறார். அதுவும் தான் கொள்வதாக இல்லாமல், தமிழ்த்தாயின் மேல் ஏற்றி, தமிழ்த்தாயே இப்படிச் சொல்கிறாள் என்கிறார்.

ஆரிய மொழி தமிழ் மொழிக்குப் பின்னால் தோன்றியது மட்டுமின்றி, தமிழ் எழுத்தை ஒட்டியே தன் எழுத்தை அமைத்துக்கொண்ட மொழி. இதனை மொழிப்பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் "பண்டைத்தமிழ நாகரிகமும் பண்பாடும்" என்னும் தமது நூலில் விளக்கிச் சொல்கிறார். "இந்திய ஆரியர்க்கு முதலில் எழுத்தில்லை. அவர் மறை எழுதாக் கிளவி எனப்பட்டது. வேத காலப் பிராமணர் தமிழ்நாடு வந்தபின், வடமொழியில் நூல் எழுதத் தமிழ் எழுத்தை ஒட்டிக் கிரந்த எழுத்தை அமைத்துக் கொண்டனர். அதன்பின் கி.பி. 10 அல்லது 11-ஆம் நூற்றாண்டில் தேவ நாகரி தோன்றிற்று. தேவ நாகரியும் தமிழ் எழுத்தைப் பின்பற்றியதே என்பது கூர்ந்து நோக்குவார்க்குப் புலனாகும்" என்கிறார்.

(தொடரும்)

ஒரு மனக்கொதிப்புக் கட்டுரை

# தமிழ், தமிழினத் தாழ்ச்சி நடவடிக்கைகள்!

—மூ. செகந்நாதன். க.இ; (க.மு)

தமிழ்நாட்டில் நாளுக்குநாள் தாளிகைகள், கண்ணைக் கவரும் வண்ணத்தில் பல்கிப் பெருகி வருகின்றன. ஆரியச் சார்பு ஏடுகளான ஆனந்தவிகடன், கல்கி, கலைமகள், தீபம், மஞ்சரி. துக்ளக், அடிவருடி ஆரியத்துதி பாடும் குமுதம், வான்மதி, அம்புலிமாமா, ராணி, ராணி முத்து போன்றவையும், தினமணிக்கதிர், இதயம் பேசுகிறது, குங்குமம் முதலான கழிசடைக் குப்பைத் தொட்டிகளும், அருவருப்பான, பாலியல் உணர்வைத் தூண்டி நம்மிடையே வயிற்றுப் பிழைப்பு நடத்தி வருகின்றன. தமிழைக் கெடுப்பதில் முனைந்து செயல்பட்டு வருகின்றன. தமிழை வளர்ப்பதற்குத் **"தென்மொழி"** பிறந்தது போல், தமிழைக் கெடுப்பதற்கே, ஆரிய ஏடுகள் உள்ளன. இந்தியன் எக்சுபிரசு, இந்து போன்ற ஆங்கில நாளிதழ்களில் இருந்து, தமிழைக் கெடுத்தும், பிராமணீயத்தையும் வடமொழியைப் புகுத்தியும் வருவது, நம்மவர்கள் அறிந்ததே. (பிராமணீயக்கொள்கை பரப்புதலை இந்து நாளேட்டின் கடைசிப் பக்கத்தைப் பாருங்கள்).

புதினம் (நாவல்) உலகில் கொடிகட்டிப் பறக்கும் ஆரியக் குளுவான்களான ஏமா ஆனந்ததீர்த்தன், சோதிர்லதாகிரிசா, உசா சுப்பிரமணியன், ஏமலதா, வாசந்தி, சிவசங்கரி போன்ற இளம் எழுத்தாளர்களும், சுசாதா, செயகாந்தன், தீபம் பார்த்தசாரதி, ஆரிய அடிமை கண்ணதாசன் போன்ற முது எழுத்தாளர்களும், தாளிகைத் துறையில் தமிழை இருட்டடிப்புச் செய்து வருகிறார்கள். ஆளுமைத் துறையில் இராமன்கள், மணியன்கள், சாத்திரிகள், அய்யர், அய்யங்கார்கள் போன்றவர்கள் தமிழினத்திற்குக் குழி வெட்டி வருகிறார்கள். போதாக் குறைக்குச் சலசாக்கள், வனசாக்கள், உசாக்கள், கிரிசாக்கள், மாலதிகள், வானதிகள், சோபனாக்கள், கீத்தாக்கள் போன்றோர்கள் தொலைக் காட்சியிலும் வானொலியிலும், ஆரிய, அய்யப்பக் குழுப் பாக்(பசனை)கள் செய்து, தமிழிசையைக் கெடுத்து வருகிறார்கள். இவர்களை முன்னின்று வழிநடத்திச் செல்பவர் ஆரிய மதத்தின் தானைத்தலைவர் காஞ்சி காமகோடிகள்!!

தமிழைக் கெடுக்கும் தமிழர் நடத்தும் இதழ்களான ராணியும், ராணிமுத்தும் குடும்ப இலக்கிய இதழ் என்று கூறிக்கொண்டு, 'ஒருசிட்டு என்னைப்பார்த்துக் கண் சிமிட்டுகிறது' "ஆண்களைக்கண்ட பெண்கள் முதலில் செய்வது எது?" "பெண்கள் 'பிரா' அணிவது ஏன்" "கசங்கிய மலரை பூசைக்கு வைக்கலாமா" இன்னும் இழி நிலையில் இதுபோன்றவற்றை அச்சிட்டு வயிற்றுப் பிழைப்பு நடத்தி வருகிறார்கள். பச்சைத் தமிழராகிய ஆதித்தனின் தினத்தந்தியைச் சொல்லவே தேவையில்லை! தினமணி சிவராமன்களின் **"பரஸ்**

**பரம், சபிட்சம், சௌஜன்யம், ஷேமம், பகிஷ்காரம், ஜலப் பற்றுக்குறை, ஹரிஜன்—ஜாதி இந்துக்கள் மோதல்''** முதலியவற்றைக் கடந்து ஒரு படி முன் சென்று **"அரசாங்க ஊழியர் ஹர்த்தால்'' "தமிழ்நாடு முழுதும் பந்த்'' ''விவசாயிகள் தர்ணு''** என்று கொட்டை எழுத்துகளில் வெளியிட்டுத் தமிழ்க்கொலை புரிவதோடு அல்லாமல் **'கண்ணியம் உள்ளவர்கள் கையில் காணப்படுவது தினத்தந்தி என்று வேறு பிதற்றிக் கொள்ளும்** ஆதித்தனின் தினத்தந்தி! கண்ணதாசன் விபீடணன் என்ருல், குமுதம் பிரகலாதன்தான்! சுருங்கச் சொன்ஞல் தமிழக அரசு நடத்தும் அத்தனே இதழ்களிலும் தூய தமிழைக் காண்பதரிது. தமிழ், தமிழர் என்று போலி வேடந்தாங்கும் முரசொலி, **விடுதலே ஏன் செந்தமிழ்ச் செல்விகூட தூய தமிழை எழுதுவதில்லே.** இந்நிலேயில் தூயதமிழை எழுத வேண்டுமென்று பார்ப்பனர்களுக்கு வெயர்த்தா ஒழுகும்?

இற்றைய நாளில் வீட்டுக்கு நான்கைந்து பட்டம் பெற்றவர்கள் இருக்கிருர்கள். வீட்டில் புதுமனே புகுதல் முதற்கொண்டு இல்வாழ்க்கைத் துணே விழா முதல் பல நல்ல நிகழ்ச்சிகள் நடந்தவண்ணமிருக்கின்றன. பேச்சு வழக்கில்தான் (Spoken Language) "ஜாஸ்தி—கம்மி'' ஜல்தியில்வா, மூலஸ்தானம், கன்னிகாதானம் என்று பேசிக்கொள்கிருர்கள். ஆஞல் திருமண அழைப்பிதழில் கூட ஆரிய அடிச்சுவடான மனுதர்மப்படி "திருமண விவாஹ சுப முகூர்த்தப் பத்திரிக்கை'' "ஸ்ரீராமஜெயம்,'' ''மிதுன லக்கினம்'' என்று போடுவதோடு அல்லாமல், மலர்ந்த முகமே வாழ்க்கையின் இன்பம் என்று போட்டுக் குறளே வேறு எழுதிக் கொடுப்பார்கள். "ஜேஸ்ட குமாரன், கனிஷ்ட குமாரன்'' ஜேஸ்ட குமார்த்தி, கனிஷ்ட குமார்த்தி'' என்று போட்டு மணமக்களேப் படாதபாடு படுத்துவார்கள். பார்ப்பனர் ஒருவரை அழைத்து இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிச்சொல்லி அவனுக்குப் பொன்னும் பொருளுமாக மூட்டை கட்டுவார்கள்.

அதே போன்று தமிழர்கள் நடத்தும் கடைகளிலும், அலுவலகஷ்களிலும் ஆங்கிலத்தில் எழுதி, தமிழில் எழுத வெட்கப் படுகிருர்கங் **கல்பஞ மெடிக்கல்ஸ், நியூசெஞ்சுரி புக் அவுஸ், ஸ்ரீகணேஎ். திரை அரங்கம், ஸ்ரீவெங்கடேஸ்வரா ரைஸ் அண்டு ஆயில் மாவுமில், தர்மலிங்கம் சில்க்ஸ், தி ஆரணி கோவஆபரேட்டிவ் டவுன் பாங்கி லிமிடெட், தி அக்கவுண்டன்ட் ஜெனரல் ஆபீஸ்** என்றும் எழுதித் தங்களே ஆரிய அடிமை என்பதை நிலே நாட்டுகிருர்கள். தென்னிந்திய திருநெல்வேலிச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் என்று எழுதும் திரு. சுப்பையா அவர்களுக்குச் செந்தமிழ்ச்செல்வர் என்ற பட்டம் கிடைத்தது நினேவுறத்தக்கது. கண்ணதாசனில் இருந்து கணேசன் வரைக்கும் உள்ள அத்தனேப் பேர்களும் கோவிலுக்குச் சென்று குலம்

கோத்திரம் சொல்லி "சகஸ்ரநாம" அர்ச்சனை செய்கிறார்கள். குறுக்கு வழியில் சேர்த்த செல்வத்தை உபயம், கும்பாபிஷேகம் என்ற பெயரில் கொட்டி அழுது, எழுத்தறிவில்லாதவர்களிடமிருந்து நல்ல பெயரை வாங்கிக் கொள்ளுகிறார்கள்.

தாய்க்குலத்தைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. எஃது எப்படி இருப்பினும், **"பாராயணம், பிரசங்கம், டிஸ்கோர்ஸ்"** போன்றவற்றில் கலந்து கொள்ளத் தவறுவது இல்லை. கொண்டவனையும் பிள்ளைகளையும் பேணாமல், ஆலயம் செல்வதில் என்னபயன்? காலையில் வானொலிப் பெட்டியின் குமிழைத் (Tune) திருப்பினால் குறளமுதம் கேட்கிறது. காதால் கேட்பதற்கு என்னவோ போல் இருக்கிறதாக்கும்! உடனே **'ஸுப்ரபாதம்'** வைத்துப் பத்திக்கடலில் மூழ்கிவிடுவார்கள். புரியாத புதிரைப் புரிந்ததாக நினைக்கும் ஆற்றல் நம் தாய்க்குலத்திற்குண்டு. **"தியாகராஜ—அய்யப்ப—இராம பஜனை"**யில் இன்னும் நாட்டமதிகம். அது மட்டுமா ஆனந்த விகடனின் 'மோகம் முப்பது வருடம்' இன்னும் எத்தனையோ கண்ணருவிகள் எல்லாம் வருகின்றன. அவற்றைத்தாம் விரும்பிப் படிப்பார்கள். பொழுது போக்க வேண்டிய அத்தனையும் ஆனந்தவிகடன், கலைமகள், கல்கி, இதயம் பேசுகிறது, குங்குமத்தில் தாம் உள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள அத்தனைக் கோயில்களிலும் அறங்காவலர்கள் தமிழர்கள் தாம். தமிழில் இறைவனுக்கு வழிபாடு செய்ய, யாருக்காவது துணிவு இருக்கிறதா? வடமொழியில் சொன்னால்தான் காதில் தேன் வந்து பாய்வது போல் இருக்கிறதாம்! இந்த வெட்கக்கேட்டை எங்குப் போய்ச் சொல்வது! சரியாகப் பத்து ஆண்டுகளுக்கு முன்பு வேங்கடவனுக்கும் தணிகை வேலனுக்கும் காவடி தூக்கினார்கள். பின்பு அவர்கள் இருவர்கள் மீதும் நம்பிக்கையை இழந்து, சபரிமலை **"சாஸ்தாவுக்கு"**க் காவடி தூக்குகிறார்கள். **படித்த மேல் தாவிகளில் இருந்து பணக்கார கருங்காலிகள் வரை, இந்தக் காட்டு விலங்காண்டித்தனமான உணர்வில் தங்களை மூழ்கடித்துக் கொள்வது மிகவும் துன்பமாக உள்ளது!** ஊர் இரண்டு பட்டால் கூத்தாடி பாடு கொண்டாட்டம் என்பார்கள். அதேபோல் தமிழ்நாடு இரண்டு பட்டுள்ளது. வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள, ஒரு கூட்டம் **"சபரிமலை சாஸ்தாவை"க்** கருவியாக பயன்படுத்துவது, நம்மவர்களான தமிழ மரமண்டைகளுக்கு, மானம் விற்ற மடயர்களுக்குப் புரியவில்லை. கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் மலையாளிகள் கூட்டம் பல்கிப் பெருகியுள்ளது.

அடுத்து, இன்று தமிழர்களிடையே நிலவும் அவல நிலையைக் கண்டு, சென்னை நகர்வாழ் ஆரியப் பதடிகள் ஒன்று சேர்ந்து, உடனடியாக வடமொழியை தொடக்கக் கல்வியில் இருந்து கல்லூரிக் கல்வி வரை பாட மொழியாக்க வேண்டுமென்றும், வடமொழி விற்பன்னர்களுக்கு நல்கை (Grants) தந்து அவர்களை ஊக்குவிக்க

வேண்டுமென்றும், சென்னை நகர் நலன் கருதி, உடனடியாக வட மொழிக்குப் பல்கலைக் கழகம் நிறுவ வேண்டும் என்றும் அரசை வற்புறுத்தியுள்ளது. அ.இ.அ.தி.மு.க ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே இவ்வாறு மாநாடு போட்டார்கள் (தி. நகரில்). இஃது இரண்டாவது முறையாக நடத்தப்பட்டது. காஞ்சி வடமொழிப் பல்கலைக்கழகம் கட்டி முடிக்கப் பெற்றுச் செயல்பட இருக்கிறதென்று ஆரிய ஏடுகள் அனைத்தும் பறைசாற்றியுள்ளன. இதன் முதல்வராகப் பூணுலார் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளதாகவும் செய்தி நிலவுகிறது.

இந்நிலையில் தமிழகத்தை அரசோச்சிய, அரசோச்சும் அரசியல் எத்தர்கள், தங்களைத் தமிழின் மறு உருவம் என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளும் வீணர்கள், தம் அன்னை கன்னித் தமிழுக்கு ஒரு பல்கலைக்கழகம் நிறுவ இயலாத நிலையில், ஆரிய மொழிக்கு இங்குப் பல்கலைக்கழகம் கட்ட, அதைப்பார்த்து வாயடைத்து இருப்ப தேன்? இது போன்ற கொடிய அவல நிலையினால்தான், தமிழ் மண்ணில் ஆரியம் செங்கோலோச்சுகிறது! சொல்வதற்கே நா கூசு கிறது! உலகாண்ட மொழி கட்டாந்தரையில் கிடக்க, இறந்தொழிந்த ஆரியத்திற்கு இருக்கை தங்கக்கட்டிலாம்! இதிலிருந்து கற்றோரும் மற்றோரும் சற்று சிந்திப்பார்களானால், நெருக்கடி நிலைக்கு முன்பு இது போன்ற பேச்சே எழவில்லை! தமிழ்நாட்டில் குடியரசு ஆட்சியில் குறிப்பாக அ.இ.அ.தி.மு.க ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்பு, ஆரிய மொழியின் வல்லாண்மை தலை தூக்கத் தொடங்கி இருக்கிறது. இந்துமதக் காவலர் காஞ்சி ஆசார்யாள் கொடுத்தனுப்பிய மாலையை நமது முதல்வர் அணித்திருக்கிறாரென்றால் ஏன் பல்கலைக்கழகம் ஏற்படாது? "ஆரியவர்த்தம்" ஏற்படாது?

கழிந்த சனவரித் திங்களில், வாரணசியில் (காசி) நடைபெற்ற அனைத்துலக இரண்டாவது இந்துமத மாநாட்டில், இந்து மதம் உலகெலாம் பரவ, நடுவணரசு அனைத்து வழிவகைகள் செய்ய வேண்டுமென்றும், இந்து மதத்தின (ஆரிய)ருக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தியது. இந்துக்குமுகாயம் தழைக்க வேண்டுமெனில், அரிசனங்களுக்கு நிகராண்மை அளித்தல் வேண்டுமாம், தீண்டாமையை ஒழித்துக் கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்க வேண்டுமாம். அனைத்துக் கோயில்களையும் நடுவணரசே எடுத்து நடத்த வேண்டுமாம்! இந்துமதப் பற்றில்லாதவர்களை அறங்காவலர்களாக அமர்த்தக் கூடாதாம்! இதில் வேடிக்கை என்ன வென்றால் வாரணசியில் புத்தத் துறவிகளை நுழைய விட்டதில்லை யாம்! அதனால் "**தலை லாமா**" நுழைந்தபோது, வேதங்கள் முழங்க வரவேற்றார்களாம்! (இவ்வாறு செய்வதின் மூலம் அவர் மாநாட்டில் கலந்து கொள்ள தகுதியுடையவராம்) அதற்குப் பகரமாக வேதியர் களுக்குக் "**கைக்கூலியுடன் தேங்காய்** வைத்துக்கொடுத்தாராம்! **அன்றே உலக வடமொழி மாநாடும் நடத்தப்பட்டது. கீழ்க்காணுவதை நிறைவேற்றியதாக இந்து நாளிதழ்**

தெரிவிக்கிறது." The importance of Sanskrit as a "link language" was emphasised. Most speakers, who addressed influent Sanskrit stressed that Indian culture and heritage would be lost if Sanskrit was allowed to die. Resolutions were adopted which called for the compulsory study of Sanskrit in schools, setting up of a world Sanskrit Academy, recruitment of Sanskrit Scholars in cultural Section of the Indian diplomatic missions abroad and facilities for publications in Sanskrit.

மேலே கண்டவற்றுள், பார்ப்பனர்கள் சிறு சிறு குழுவினராக இருந்த போதிலும், கொள்கைப் பிடிப்பிலும், வடமொழியைப் பரப்புதலிலும், தமிழ் இனத்தவரைக் கண் துடைப்புச் செய்வதிலும் வல்லவர்களாக இருக்கிறார்கள் என்பதை நன்கு தெரிந்து கொள்ளலாம். இனி இவ்வாறு இருக்க, தமிழ்நாட்டில் உள்ள சில முதுபெருந் தலைவர்கள் குறிப்பாக திரு பக்தவசலனார் அவர்கள் நடுவணரசு இந்தியைத் திணிக்கவில்லையென்றும், சில அரசியல் கட்சிகள் ஊதியம் தேடுவதாகவும், அரசியல் சட்டம் 8-ஆவது பிரிவில் கூறியுள்ள அனைத்து மொழிகளையும் தேசிய மொழிகளாக்க அரசுக்கு அதிகச் செலவாகுமென்றும், அவ்வாறு செய்ய இயலாது என்றும் கூறித் தம்மை ஆரிய அடிமை என்றும் கூறிக்கொள்கிறார்.

நடுவணரசு, கல்வி, கலை பண்பாட்டியல் அமைச்சர் திரு. பி. சி. சுந்தர் அவர்களும், தமிழர்கள் இந்தியை விரும்பிப் படிக்கிறார்கள் என்றும், 24000 பேர் இந்தித் தேர்வில் வெற்றி பெற்றுள்ளார்கள் என்றும், தமிழ்நாட்டு எதிர்கட்சிகள்தாம் அ ர சி ய ல் ஊதியம் தேடுவதாக அண்மையில் நடந்த விழாவென்றில் குறிப்பிட்டார். அதுமட்டுமா, பாராளுமன்ற கூட்டுக் கூட்டத் தொடரில் (Joint Session) குடியரசுத்தலைவர், தொடக்கவுரையை (Inagural Address) ஆங்கிலத்தில் படித்தபோது, மக்கள் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான திரு. மணிராம் பக்ரி, கூச்சலிட்டு, இந்தியில் அறிக்கையைப் படிக்குமாறு வலியுறுத்தினார். இவர்களுக்கு உள்ள காட்டு விலங்காண்டித் தனமான இந்தி, மதவெறிக் கொள்கைகளை முறியடிக்கும் வகையில், குடியரசுத் தலைவர், மோதிலால் நேரு கலைக் கல்லூரித் தொடக்க விழாவில், தெலுங்கில் பேசித் தமது தாய்மொழிப் பற்றைக் காட்டி, அனைவருக்கும் விளங்கும் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தி, இந்திக்காரர்களின் முகத்தில் அசடு வழியச் செய்தார். இதை உண்மையான தாய்மொழிப்பற்று என்று கூறலாம்!

இனித் தமிழ்நாட்டின் தன்னேரில்லாத் தலைவர், நமது புரட்சித் தலைவர் முதல்வர் அவர்கள், கோட்டையில் கூட்டிய எதிர்க்கட்சிகள் கூட்டத்தில் இத்தித்திணிப்பு எங்கே, என்று கேட்டும், தலைமை அமைச்சர் தாம் நேரு தந்த உறுதி மொழியைக் கடைப்பிடிப்பதாகக் கூறியும், கருணாநிதிதாம் குழப்பிய குட்டையில் மீன்பிடிக்கத் திட்ட

மிட்டுள்ளதாகவும் கூறினர். மறு பக்கத்தில், இந்தித்திணிப்பை முழு மூச்சோடு எதிர்ப்பதாகவும், தமது அரசு அண்ணாவின் வழி நின்று வருவதாகவும் கூறிவிட்டு, இந்தி எதிர்ப்பு மாநாட்டைக் கோவையில் கூட்டுவதாக விளம்பரப்படுத்தி, பின் வீரவணக்க மாநாடு என்று அறிவித்தார். முதலில் இந்தித்திணிப்பு எங்கே என்றார். பின்பு இந்தியை எதிர்ப்போம் என்றார். தமிழினத்தலைவர், ஒரு முதல்வர் முன்னுக்குப்பின் முரணாகப் பேசுவதில் வல்லவராக இருக்கிறார். அரசியல் காழ்ப்புணர்ச்சியும், தனி மாந்த உட்பகையும் (Enmity) ஒருபுறம் இருக்கட்டும். இஃது எட்டுகோடித் தமிழர்களின் மானச்சிக்கலாயிற்றே! எல்லாக் கட்சியும் ஒன்றாகத்தானே குரல் எழுப்ப வேண்டும். அப்பொழுதுதானே இந்தி என்ற நச்சுச்செடியை அழிக்க முடியும். மொரார்சியாக இருந்தாலும், இந்திராவாக இருந்தாலும் மொழி இனக்கொள்கையில் ஒன்றாகவே செயல்படுகிறார்கள். இஃது அவர்களுக்குள்ள ஒற்றுமையையும், முன்னது நம்மவர்க்குள்ள தாழ்வு நிலையையுந்தாமே காட்டுகின்றன.

1976-ஆம் ஆண்டு சனவரித்திங்கள் 31-ஆம் (தேதி) பக்கலன்று, ஆரியப் பதடிகளின் தரமிகு சூழ்ச்சியினால், தமிழர் ஆட்சி கவிழ்க்கப்பட்ட அன்றிரவே, தலைமைச் செயலகத்தைச் சார்ந்த உயர் அதிகாரியில் இருந்து கடைநிலை ஊழியர் அனைவரும், அஃதாவது அத்தனை ஆரியக் கும்பலான குஞ்சுகுளுவான் முதற்கொண்டு, தலைக்கு எண்ணெய வைத்துக் கொண்டு குளித்து, சென்னைப் பெருநகரில் உள்ள எல்லாக் கோவில்களிலும் "சகசுரநாம அர்ச்சனை" செய்து கொண்டார்களாம்! தமிழர்களின் ஆட்சிக்குச் சாவு மணி அடித்து விட்டதாக மகிழ்ந்து கொண்டிருந்தார்களாம்! எனது விரிவு அலுவலராகப் (Section Officer) பணிபுரிந்து வருகிற ஒருவரின் காதுபட எல்லோரும் பேசி, கூடி, கூத்தாடி இருக்கிறார்கள். மறுநாள் காலை தான் தமிழ் மூத்த அதிகாரிகள் அனைவரும் பதவியிறக்கம் செய்யப் பட்டார்கள்; மாற்றப்பட்டார்கள்; க ட் டா ய ஓய்வு அளிக்கப் பட்டார்கள் என்பது நினைவு கொள்ளத்தக்கது. தமிழா! படுபள்ளத்தில் கிடப்பதைக் கண்திறந்து பாா! நின் தன்மானம் எங்கே? மண்மூடிப் போவதற்குள், புறப்படு களம் நோக்கி! o


## "தென்மொழி" சென்னை-5

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம்: | 12 உருபா | 30 உருபா | 30 உருபா |
| அரையாண்டுக் கட்டணம்: | 6 ,, | 15 ,, | 15 ,, |
| தனியிதழ்: | 1 ,, | 2 ,, | 2 ,, |

ஓரிதழுக்கு உருபா 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

# விடுதலைப் பாவலன் ஒருவனின் வீர உரை!

(உணர்ச்சிப் பாவலர் **காசி ஆனந்தன்** தமிழீழ விடுதலைக்கே தம்மை ஒப்படைத்துக் கொண்ட உண்மை மறவர். கடந்த முறை ஒன்பது மாதங்கள் இலங்கையின் சிங்கள வல்லாண்மை அரசு அவரைச் சிறை வைத்திருந்து வெளியே விட்டது. அப்பொழுது அவருக்கு நடந்த வரவேற்பு விழாவில் அவராற்றிய உணர்ச்சி உரை இது. இங்குள்ள தடித்த தோல் தமிழர்களின் தன்மான உணர்வுக் கீறலுக்கு இது பயன் படலாம் என்று கருதி இங்கு வெளியிடுகிறோம். வடசொற்கள் தமிழ்ப் படுத்தப் பெற்றுள்ளது தவிர வேறு மாறுதல் இதில் இல்லை.)

தமிழ் ஈழத்தின் தலைவர் அண்ணன் அமிர் அவர்களே; இயக்கத்தின் ஏனைய தலைவர்களே! தாய்மார்களே! இளைஞர்களே!

சிங்கள ஓரதிகார ஆட்சியின் சிறைச்சாலையில் ஒன்பது மாதங்கள் தங்கி இருந்துவிட்டுத் திரும்பிய என்னை இங்கு வரவேற்கக் கூடி இருக்கிறீர்கள்.

எனக்கு இது பழகிப்போன செய்தி. ஆட்சியாளருக்கு என்னை மிகவும் பிடித்திருக்கிறது. நான் அவர்களுடைய உணவையே சாப்பிட வேண்டும்—அவர்களுடையே வீட்டிலேயே தங்கவேண்டும் என்று அவர்களுக்கு என் மீது ஒரு பெரிய அன்பு—அதனால் இப்படி அடிக்கடி என்னைத் தளை செய்து சிறைச்சாலைகளில் வைத்துக் கொள்கிறார்கள்.

சிங்கள ஓரதிகார ஆட்சியின் காவலர்கள் இதுவரை பன்னிரண்டு தடவைகள் என்னைச் சிறை செய்திருக்கிறார்கள்—ஐந்து ஆண்டுகளும் இரண்டு மாதங்களும் நான் சிறைச்சாலையில் இருந்திருக்கிறேன். தமிரழசுக் கட்சி தோன்றி-தமிழர் விடுதலைக் கூட்டணியாக வளர்ந்து வந்துள்ள கடந்த முப்பது ஆண்டுக்கால தமிழ் ஈழ விடுதலை இயக்க வரலாற்றில், கூடிய தடவைகள் காவலர்களால் சிறை செய்யப்பட்டவனாகவும்— கூடிய ஆண்டுகள் சிறை வாழ்க்கை செய்தவனாகவும், நான் இருக்கிறேன். இஃது எனக்கு ஒரு பெரிய நிறைவே! என்னை நான் என்னால் முடிந்தவரை என் விடுதலை இயக்கத்துக்குத் தந்திருக்கிறேன் என்பது எனக்கு ஒரு பெரிய மகிழ்ச்சியே!

ஆட்சியாளர்கள் என்னை-என் உடன் பிறப்புகளை-என் வீட்டை-என்னை விரும்பும் இயக்கத் தோழர்களை-ஏன் என் புனைப் படங்களைக் கூட விடுகிறார்கள் இல்லை. அவர்களுக்கு என்னிடம் அப்படி ஒரு பெரிய பாசம் ஏற்பட்டிருக்கிறது.

என்னோடு கூடப்பிறந்த என் இரு தம்பியர்களையும் கடந்த காலங்களில் சிறைச்சாலையில் அடைத்தும்—நாலாவது மாடியில் அடித்தும் துன்புறுத்தினார்கள். நானும் என் தம்பிகளும் சிறையில்

வாடிய காலத்தில்தான் என் தந்தையார் கவலையால் நோய் வாய்ப்பட்டுச் சாவைத் தழுவினர்.

கடந்த இனக்கலவரத்தின் போது என் வீட்டினுள் திடீரென்று நுழைந்த படைத்துறையினர் வீட்டுக்கூரையை உடைத்து எறிந்து, பேழைகளையெல்லாம் உருட்டி நொறுக்கி, என் புகைப் படங்களில் எனக்கு இயக்கத் தோழர்கள் ஆக்கி அணிவித்த மாலை ஒன்றை எடுத்து, அதில் இருந்த நூற்றுக்கு மேற்பட்ட என் புகைப் படங்களைத் தங்களுக்குள் பிரித்துப் பங்கு போட்டு, இந்தப் புகைப்படங்களை ஏனைய படை வீரர்களிடமும் கொடுத்தால் நாளைக்குப் பயன்படும் என்று சொன்னதோடு "காசி ஆனந்தனிடம் அவனது தோலை உரித்துத் தொங்க விடுவோம்" என்று கூறு" என்று என் தாயாரிடமும் கூறிவிட்டுப் போனார்கள்.

சில மாதங்களுக்கு முன்பு மட்டக்களப்பைச் சேர்ந்த சகாயம் என்னும் என் இயக்கத்தம்பி ஒருவன் கண்டித் தொடர்வண்டி நிலையத்தில் இறங்கியபோது ஐயத்தின்பேரில் சிறை செய்யப்பட்டான்-காவல் நிலையத்தில் அவனது கைப்பெட்டியைத் திறந்து பார்த்த காவலரின் கண்களில் எனது புகைப்படம் ஒன்று பட்டிருக்கிறது. விளைவு-அந்த இளைஞன் காவலரால் கொடுமையாக நையப் புடைக்கப்பட்டான்.

அண்மையில் மோர்சாப் பிட்டியில் தவராசா என்னும் இளைஞர் எனது பேச்சு ஒன்றைப் பதிவுசெய்த நாடாவைப் பதிவானில் போட்டுக் கேட்டுக் கொண்டிருந்தார். திடீரென்று அவரது வீட்டினுள் பாய்ந்த காவலர் அவரைச் சிறை செய்தது மட்டுமன்று, ஒலிப்பதிவு நாடாவையும் அவரிடமிருந்து பறித்தெடுத்துச் சென்றிருக்கிறார்கள்.

சிறைச்சாலையில் நான் தங்கி இருந்தபோது 'சுதந்திரன்' இதழில் ஒரு செய்தி படித்தேன். யாழ்ப்பாணம் அரசமாளிகையில் (King's House) துமுக்கிப் பயிற்சி பெறும் காவலர் என்னுடைய அச்சிட்ட புகைப்படத்தின் மீது குறி பார்த்துச் சுட்டுப் பழகுவதாக ஒரு செய்தி வெளியாகி இருந்தது.

நண்பர்களே! இவையெல்லாம் நான் பெருமைப்படும் நிகழ்ச்சிகளே!

இனவெறிச் சிங்கள வல்லதிகாரம் என்னை எவ்வளவு பெரிய அளவில் நேசிக்கிறது என்பதை நான் ஒவ்வொரு நிமையமும் எண்ணிப் பார்த்து உண்மையிலேயே உள்ளம் பூரிக்கிறேன்.

ஒரு விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவனை ஆட்சியாளர்கள் அழைத்து முத்தமிடுவார்கள் என்று ஒரு விடுதலை வீரன் எதிர்பார்க்க மாட்டான். நானும் அப்படித்தான்; இந்த ஆட்சியாளரிடமிருந்து எதையும் நான் பெரிதாக எதிர்பார்க்கவில்லை. காந்தியடிகளுக்குப் பிரித்தானியன் கொடுத்ததை—அங்கோலா வீரன் நேட்டோவுக்குப் போர்த்துக்கீசன் கொடுத்ததைத்தான் நானும் சிங்கள வல்லரசிடம் எதிர்பார்க்க முடியும்—அதையே நான் எதிர்பார்க்கிறேன்.

தந்தை செல்வாவின் அற வழியில் நீண்ட காலமாகத் தத்தித் தத்தி நடை பழகியவன் நான். "உன்னை அழித்துக் கொள்ள ஆயத்த மாக இரு; அதுவே உன் விடுதலைப் போராட்டத்தில் நீ கற்க வேண்டிய முதல் பாடம்" என்று அந்த நல்லவர் எனக்குச் சொல்லித் தந்திருக்கிறார்கள். இந்தப் பாடம் மென்முறையின் (அகிம்சையின்) ஆணிவேர் ஆகும். சாவுக்கு அஞ்சாத நிமிர்ந்த வாழ்வு விடுதலை வீரனின் மாபெரும் வாழ்வு என்பதை நான் அறிவேன். **நெல்லை வளைந்து நின்று அறுவடை செய்யவேண்டும்—ஆனால் விடுதலையை நிமிர்ந்து நின்றுதான் அறுவடை செய்ய வேண்டும்.**

இன்று தமிழ் ஈழத்தில் ஒரு தேசிய இனம் நிமிர்ந்து நிற்கிறது. விடுதலைப் போராட்டம் ஒன்று இங்கே வீறுநடை போடுகிறது. இதை ஆட்சியாளர்கள் தடுத்து நிறுத்திடலாம் என்று நினைக்கிறார்கள். அச்சுறுத்தினால் நாம் பணிவோம் என்று மனப்பால் குடிக்கிறார்கள். இந்த நினைவோடுதான் புகைப் படத்தைக் குறிபார்த்துச் சுட்டுப் பழகியிருக்கிறார்கள் போல் தெரிகிறது. அவர்களுக்கு நான் ஒன்றை மட்டும் சொல்வேன்: எனது புகைப்படத்தை என்ன, நீங்கள் என்னையே குறிபார்த்துச் சுட்டாலும் நான் அசைவேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

உங்கள் துமுக்கிக் குண்டுகளுக்கு என் விடுதலை வேட்கையைச் சுட்டு வீழ்த்தும் ஆற்றல் இல்லை என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள விரும்பினால்—இந்த விடுதலை வீரனின் பாடல்கள் இவனது இறப்பின் பின் இன்னும் கோடி மதிப்புப்பெறும் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள விருமபினால், சுட்டுப்பாருங்கள் நான் ஆயத்தமாகவே இருக்கிறேன்!

நான் என்ன குற்றம் புரிந்தேன்? என்னுடைய நாட்டை என்னுடைய நாடு என்று சொன்னேன்—இந்த நாட்டை என் தந்தையும்—பாட்டனும்—பாட்டனின் பாட்டனும் – அதற்கு முன்பும் அவனுக்கு முந்திய அவன் பழந் தலைமுறைகளும் பல்லாயிரம் ஆண்டுகள் தங்கள் தாய் வீடாகக் கொண்டு வாழ்ந்த வரலாற்றை அறிந்து கொண்டுதான், இந்த நாடு என் சொந்த நாடு என்று நான் சொன்னேன்—இது குற்றமா? இந்த மண்ணை இன்னொருவன் ஆள விட மாட்டேன் என்று நான் பாப் பாடுவதும் அறப்போர் ஆடுவதும் குற்றமா?

நீங்கள் எங்களை அடிமைகளாக வைத்து ஆள்வது குற்றமா? அல்லது நீங்கள் எங்களை அடிமைகளாக வைத்து ஆளாதீர்கள் என்று நாங்கள் கூறுவது குற்றமா?

சிறைச்சாலையில் இருந்தபோது நான் ஒரு செய்தித்தாளில் படித்தேன்—தமிழ் ஈழம் பற்றிப் பேசுவோருக்கு வெளிப் படையாகக் கசையடி வழங்கவேண்டுமென்று நாடாளு மன்றத்தில் சட்டம்

கொண்டுவர இருப்பதாக அந்தச் செய்தி கூறிற்று. செய்தியைத் திரும்பவும் படித்துப் பார்த்தேன் — எனக்குச் சிரிப்பே வந்தது.

உலகில் சில நாடுகளில் கசையடி வழங்கும் தண்டனை உண்டு என்பதை நான் அறிவேன். ஆனால் யாருக்கு? பிறனுடைய சொத்தைத் திருடியவனுக்கு; திருட்டுக் கொடுத்தவனுக்கன்று. இங்கே என்ன நிலை? தமிழ் ஈழத்தைத் திருடியவன் தமிழ் ஈழத்தைத் திருட்டுக் கொடுத்தவனுக்குக் கசையடி தரப்போகிறான். இஃது ஒரு வேடிக்கையான நிலைதான். திருடனின் கையிலேயே சவுக்கு தரப்பட இருக்கிறது. ஆனால் இந்தக் கசையடி தமிழ் ஈழ விடுதலை வீரர்களைக் கட்டுப் படுத்தாது என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இதுவரை எங்களுக்கு நீங்கள் இழைக்காத கொடுமைகளையா இனி இழைத்துவிடப் போகிறீர்கள்? தமிழாராய்ச்சி மாநாட்டின் போது ஒன்பது தமிழ் இளைஞர்களின் உயிர்களைக் குடித்தீர்கள். பரராசா என்னும் இளைஞனைத் துமுக்கிக் குண்டுக்குப் பலி ஆக்கினீர்கள். சிவகுமாரனைச் சாகடித்தீர்கள் தலைகீழாகக் கட்டித் தொங்க வைத்துத் தலையின்கீழ் நெருப்பை வளர்த்து, எங்கள் தம்பிகளை உயிரோடு கருவாடு போட்டீர்கள். சிறைச்சாலைகளில் தமிழ் இளைஞர்களை உயிர்ச்சிதைவு செய்தீர்கள்; தமிழ் ஈழ விடுதலைப் போர் தணிந்தா போயிற்று? அடக்க அடக்க எங்கள் விடுதலை இயக்கம் உணர்ச்சிமிகு பேரியக்கம் ஆயிற்று!

இந்நிலையை ஆட்சியாளர் புரிந்து கொள்ள வேண்டும். 72-ஆம் ஆண்டுக்குப் பின்பு நீங்கள் அவிழ்த்து விட்ட அடக்கு முறையின் அளவு என்ன? இந்த அடக்கு முறையின் பின்பு தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் அளவு என்ன என்பதை அருள்செய்து எடை போட்டுப் பாருங்கள். அப்போதுதான் அடக்கு முறைகளால் எங்களை அணுவளவும் அசைக்க முடியாது என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

நாங்கள் தந்தை செல்வா பழக்கிவிட்ட துன்புறுத்தா வழியில்- அண்ணன் அமிர் அவர்களின் புனிதமான கட்டளையின் கீழ் எங்கள் உயிரினும் இனிய விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தொண்டர்கள் துன்புறுத்தா வழியினர் என்பதால் அவர்கள் அஞ்சியவர்கள் என்று தப்புக் கணக்குப் போடாதீர்கள். நாங்கள் சாவுக்கு ஒரு போதும் அஞ்ச மாட்டோம்.

எங்கள் விடுதலை வீரர்களின் இறப்பின் வயிற்றில் இருந்து எங்கள் விடுதலையின் பிறப்பு நிகழ்வதை நீங்கள் என்றோ காணத் தான் போகிறீர்கள். தமிழ் ஈழம் அமைவதை உங்களால் தடுக்கவே முடியாது என்று தலைக்கனம் பிடித்த ஆட்சியாளரே உங்களுக்குத் தெளிவாகச் சொல்லி வைக்கிறேன்.- நன்றி. **'சுதந்திரன்' (1-7-79)**

# ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்!

மருத்துவ அறிஞர். கோ. கோவிந்தனூர்.

## அலித்தன்மை.

அலித்தன்மை என்றால் என்ன என்று அறுதியிட்டுக் கூறுதல் கடினம். அலித்தன்மை என்றால் ஆண்மை இன்மை என்று பொருள். குறிப்பாகப் புணர்ச்சியின்போது ஆண்மை இன்மை என்று பொருள். ஆண்மை இன்மைக்கு எதிரிடை ஆண்மை. ஆண்மையைக் கூடிய வரையில் அறுதியிட்டுக் கூறலாம். இயற்கையான முறையில், ஒழுங்காகவும், முழுமையாகவும் ஒரு பெண்ணை, ஓர் ஆண் புணர்ந்து மகிழ்விக்கும் திறனுக்கு ஆண்மை என்று கூறலாம். சொல்லுக்குச் சொல் மேலே கூறியதைப் பின்பற்றினால், சூழ்நிலைக்குத் தகவும், ஒவ்வொருவருக்குத்தகவும் பல திருத்தங்களைச் செய்ய வேண்டி வரும். ஆண்மை என்பது ஒவ்வொரு மாந்தனுக்கும் தனியான பொருள் உடையது. முதலில் ஒருவனின் இயல்பான பால் உணர்ச்சியின் அளவு என்ன என்பதை ஆராய வேண்டும். அந்த அளவு அந்த ஆண் போன்ற மாந்தர்களின் அளவுகளுக்கு மாறுபடலாம். ஒரே அகவையுள்ள பலரை எடுத்துக் கொண்டால், சிலருக்கு இயல்பாக ஒவ்வொரு நாளும் புணர்ச்சி வேண்டி இருக்கலாம். சிலருக்குக் கிழமைக்கு இரண்டு முறைகள், சிலருக்குக் கிழமைக்கு ஒருமுறை, சிலருக்கு மாதத்திற்கு இரண்டு முறைகள், சிலருக்கு மாதத்திற்கு ஒருமுறை புணர்ச்சி வேண்டி இருக்கலாம். நாம் மேலே குறிப்பிட்ட எல்லாரும் இயற்கையான வழிகளைப் பின்பற்றி, ஒழுங்கான முறையில் வாழ்க்கை நடத்துபவர்கள் தாம். இவர்கள் எல்லோரும் ஆண்மை உடையவர்கள் என்றே கருதப்படுகின்றனர். நாள் புணர்ச்சி வேண்டியவர்க்குத் திடீரென்று, மாதத்திற்கு ஒருமுறை தான் தன்னால் புணரமுடியும் என்று கண்டால், அந்தக்குறை அலித் தன்மை எனப்படும். ஒரே இரவில், ஒருமுறைக்குமேல் புணர்தல், உடல் வலுவைப் போன்றும், மூளை வலுவைப் போன்றும் ஒவ்வொரு வருடைய தனி ஆற்றலைப் பொறுத்தது. அகவை ஆகஆக மாந்த ருடைய ஆண்மை சிறிது சிறிதாகக் குறைகிறது. சிலருக்கு அகவை முதிர்வதற்கு முன்பே ஆண்மைக்குறைவு உண்டாகலாம். இந்நிலை உண்டாகாதபடி தடுத்துக் கொள்ளலாம். **ஆயினும் மூப்பில் அலித்தன்மை வந்தே தீரும். அதைத் தவிர்க்கவே முடியாது.** இயல்பான நடைமுறையில் கூட சிலருக்கு, அறுபது அகவையிலும், சிலருக்கு எழுபது அகவையிலும், சிலருக்கு எண்பது அகவையிலும் அலித்தன்மை வந்தடைகிறது. நாம் மேலே குறிப் பிட்ட ஒவ்வொருவருக்கும் அந்நிலை இயல்பானதே அன்றி, அகவை முதிர்வதற்கு முன் ஏற்பட்டதன்று.

இன்பமான புணர்ச்சி என்று எதை மனதில் நினைந்து கூறுகிறோம்? ஆணுக்கு உச்ச நிலையில் ஒளிநீர் வெளியேறுவதை மனதில் கொண்டா? ஆணுக்கு ஒளிநீர் மிக விரைவில் வெளி வந்துவிடலாம். ஆகவே பெண் முழுக்க முழுக்க இன்பம் துய்க்கும் வரை புணரும் ஆண்மகனே ஆண்மை உடையவன் எனப்படுவான். அப்புணர்ச்சியே இன்பப் புணர்ச்சியாகும். புணர்ச்சியின் போது ஒளிநீரை விரைவில் வெளிவிடும் ஆண் மகனால் பெண்ணுக்கு எவ்வகை இன்பமும் கிடைப்பதில்லை. ஆண்களில் சிலருக்குப் பெண் உச்ச நிலையை அடையும்வரை ஆண்குறியின் எழுச்சியை நிலைத்திருக்கச் செய்ய முடிவதில்லை. பெண் உச்ச நிலையை அடைவதற்கு முன்பே ஆண்குறி தொய்ந்து விடுகிறது. இப்பேர்பட்ட ஆணால், பெண்ணைப் புணர்ச்சியின்போது முழு இன்பம் துய்க்கச் செய்ய இயலாது. ஆனால் அந்த ஆண்மட்டும், புணர்ச்சியின் இன்பத்தைப் பெறுகின்றான். இவ்வகை ஆண்களை, உண்மையில் ஆண்மை அற்றவர்கள் என்றே கூற வேண்டும். ஆகவே முதலில் நாம் ஆண்மைக்குக் கூறிய வரையறையை சிறிது மாற்றிக் கொள்ள வேண்டும். **"தடையற்ற ஆற்றலுக்கும் அகவைக்கும் ஏற்ப, ஓர் ஆண், தனக்கு முழு இன்பம் உண்டாகப் புணர்வதோடு, தான் புணரும், இயல்பான பெண்ணுக்கும் முழு இன்பம் கொடுக்கும் தன்மையை ஆண்மை" எனக்கூறலாம்.** அஃதாவது தனக்கும் முழு இன்பம் கிடைக்க வேண்டும்; தான் புணரும் பெண்ணுக்கும் முழு இன்பம் கிடைக்க வேண்டும். இருவரும் தக்க அகவை உடையவர்களாகவும், நோயற்ற உடல் நிலை உள்ளவர்களாகவும் இயல்பான தன்மை உடையவாகளாகவும் இருக்க வேண்டும்.

ஆண்மையைப்பற்றி விளக்கம் கூறியபின் அலித்தன்மையைப் பற்றி விளக்கம் கூறுதல் எளிது. ஆண்மைக்கு எதிரிடையானது அலித்தன்மை. இஃது ஓர் அளவு வரைதான் பொருந்தும். ஓர் ஆண் சில வேளைகளில் ஆண்மையுடன் இருக்கலாம். அதே ஆணுக்குச் சில வேளைகளில் ஆண்மை போய் அலித்தன்மை ஏற்படலாம். ஓர் ஆண் பெண்கள் சிலருடன் ஆண்மைத் தன்மையோடு நடந்து கொள்ளலாம். அதே ஆண் வேறு பெண்களுடன் ஆண்மைத்தன்மையோடு நடந்து கொள்ள முடியும் என்று சொல்ல இயலாது. இயல்பான முறைக்கு மாறான வழியில் இன்பம் துய்த்தால் தான் சிலருக்கு ஆண்மை வெளிப்படும் இல்லையானால் அவர்களுக்கு அலித்தன்மையே மேலோங்கி நிற்கும். சிலர் கலவியில் விருப்பம் இல்லாமலேயே ஆண்மையைக் காட்ட இயலும். சிலருக்குப் புணர்ச்சியில் விருப்பம் இருந்தும், ஆண்மை கிளர்ந்து எழாது. இவ்வாறாக அலித்தன்மையில் பல வேறுபாடுகள் காணப்படலாம். பலவகைக் காரணங்களால் ஏற்பட்ட முடிவே அலித்தன்மைக்குக் காரணமாகலாம். ஆகவே அலித்தன்மையைப் பற்றிய வரையறுப்பு மிகுந்த சிக்கல் நிறைந்ததாகிறது. அலித்தன்மையைப்பற்றிச் சில வரிகளில் நூற்பா

வடிவாக வரையறை கூறுவதைவிட விளக்கிக் கூறுவதே, தகுந்த முறையாகும்.

எக்காரணம் கொண்டேனும் பெண்ணிடம் விருப்பம் இல்லாதவர்களும், ஒருவருக்கு விருப்பம் இருந்தும் புணரும்பொழுது, 'இம் — — இதுவும் ஓர் இன்பமா' என நினைந்து மரத்துப் போகிறவர்களும், அலித்தன்மை உடையவர்களே. ஒருவருக்கு ஆண்குறியின் எழுச்சி மிகுதியாக ஏற்படினும், ஒளிநீர் விரைவாக வெளியேறின் புணர்ச்சியில் இன்பம் காண இயலாது. இவர்களும் அலித்தன்மை உடையவர்களே. புணர்ச்சியில் ஆண்குறியின் எழுச்சியைச் சிறிது நேரமே, நிலைத்து நிற்கச் செய்யும் ஆற்றல் உடையவர்களும், ஆண்குறியின் எழுச்சியே இலலாதவர்களும் அலித்தன்மை உடையவர்களே. புணர்ச்சியில் உச்சநிலை அடையும் போது விளக்க முடியாத இன்ப நிலையும், ஒளிநீர் வெளியேறுதலும், நிகழாமல், வெறுமனே எப்பொழுதும் இருப்பதுபோல் இருந்தாலும், வெறுப்போ, வலியோ தோன்றினாலும், அலித்தன்மை உடையவர் எனக்கொள்ள வேண்டும். எப்பொழுதோ ஒருமுறை புணர்ச்சி உணர்வு ஏற்படுகிறவர்களும், அலித்தன்மை உடையவர்களே. மிகுதியான கிளர்ச்சியினால் அடிக்கடி புணர்கிறவர்களும் அலித்தன்மை உடையவர்களே. ஏன் எனில் ஒவ்வொரு முறை புணரும்பொழுதும் அவர்கள் முழு இன்பம் துய்ப்பதில்லை. ஒருவருக்குப் புணர்ச்சியின்போது தாம் முழு இன்பம் பெற்றதாக நினைக்கலாம். ஆனால் அவர் இன்பம பெற்ற நிலையை நினைத்துப் பார்க்கும்பொழுது, மனநிறைவு ஏற்படுவதில்லை. அஃதாவது அவருடைய புணர்ச்சி வேட்கை தணியவில்லை. இப்படிப் பட்டவரும் அலித்தன்மை உடையவரே. இவ்வாறு அலித்தன்மையைப்பற்றி ஒருவாறாக விளக்கம் கூறலாம்.

பலர் அலித்தன்மைக்கும், மலட்டுத் தன்மைக்கும் வேறுபாடு தெரியாது விழிக்கின்றனர். இரண்டிற்கும் இடையில் தொடர்பு இருக்கவேண்டும் என்பது இல்லை. இரண்டும் ஒரே வகைக் காரணங்களால் ஏற்படலாம். ஒரே மாந்தனிடம், இவை இரண்டும், தனித்தேனும், சேர்ந்தேனும் காணப்படலாம். அலித்தன்மை என்பது புணர்ச்சி செய்ய இயலாமையேயன்றி வேறன்று. மேலே விளக்கப்பட்ட அவ்வியலாமை பலவேறுபட்ட காரணங்களால் உண்டாகலாம். **மலட்டுத்தன்மை என்பது, ஓர் ஆணால் பெண்ணை கருத்தரிக்க வைக்கும் ஆற்றல் இல்லாமை என்பதாகும்.** மலட்டுத்தன்மை உடைய ஒருவன் ஆண்மை உடையவனாக இருக்கலாம். ஆண்குறியின் எழுச்சி மிகுதியாக இருக்கலாம். மிகுந்த நேரம் புணரும் ஆற்றல் உடையவனாகவும், மிகுதியான ஒளிநீரை வெளிவிடுபவனாகவும் இருக்கலாம். ஆனால் அதில் ஆண்கரு உயிர்களே இல்லாமலும், ஆண்கரு உயிர்கள் இருந்தாலும் அவை செயல் அற்றனவாகவும் இருந்தால் அவன் எத்தனை முறை புணர்ந்தாலும், அவனால் தந்தையாக முடியாது. —(தொடரும்)

இன்னும் இதுபோன்ற தென்மொழி அன்பர்களையும், அன்பர் அவைகளையும் ஒருங்கிணைத்தல் தொடர்பாகத் தாங்கள் நெறியுரைகளைத் தென்மொழியில் வெளியிட்டால் அஃது எமக்கு வழிகாட்ட இயலும். மேலும், தென்மொழியின் பெயரால் அமையும் அமைப்புகளுக்குத் தாங்கள் கட்டளையிட்டு நெறிப்படுத்துதல் பல்வகையில் சிறப்பும் தேவையுங்கூட. ஆக, அன்பார்ந்த ஐயா எம் பணிவன்பான கருத்துரையை உளங்கொள வேண்டுகிறோம்.

—**மா. செ. தமிழ்மணி**, நெமிலி, (வ.ஆ.)

*0:663:* நன்றுநந் தென்மொழி அன்பர் நுகர்திறன் நன்றுநன்றே
"அன்று இருந்தேன்நான் இன்று மிருந்தேன் அழியாமலே
என்று மிருப்பேன்" எனும்பாப் புகழ்ந்தா ரிலே,யினியே
துன்றுக அத்திறப் பாடலும் மற்றைச் சுவையுடனே!

உலகியல் நூறுடன் ஒண்ணூ ரகவல்
அலகிலா நும்பேர் அறையும் — இலகுறும்
நோவல் பரிசும் நுமதே உஞற்றுக
பாவல ரேறே பரிந்து! —**ச. தமிழ்வேலன்,** மன்னார்குடி.

*0:664:* நாளும் நல்ல தமிழ்ப் பயிர் வளர்க்குஞ் சொல்லேருழவ, பணிவார்ந்த வணக்கம். தமிழர்களே தமிழைப் புறக்கணிக்குந் தணிப்பரிதாங் கொடுமை பற்றிய தங்களது சீரிய கருத்துரைகள் நிரம்பிய ஆசிரியவுரை மிக நேர்த்தியானது. அறிவியக்கப் பேராசிரியரின் சிறு மதியினையும், தற்செருக்குத் தலைக்கேறியதால் தமிழையுந் தமிழரையும் மதியாத பொறுப்பற்ற போக்கினையும், ஒட்டாரத்தையுந் தெளிவாக்கித் தூய தமிழ் நலம் நாடுவோர்க்கு விழிப்பூட்டியிருந்தீர்கள் நன்று. கற்ற மொழியின் மாட்டு அக்கறையும் பற்றுமின்றி வாய் வந்தன பேசித்திரியும் அப்பேராசிரியர்க்கு, அவர் கற்றறிந்த கல்வி உற்ற காலத்து உதவா தொழிதல் ஒருதலை. 'உடன் பிறந்தே கொல்லும் பிணி'யொக்கும் அன்னார்க்கு, உயரும் வரை மட்டுமே தமிழ் தேவை; உயர்ந்த பிறகு மேலுமுயரப் பொருள்மட்டுந் தேவை. உயர்ந்து நிற்கும் அப்பேராசிரியர் ஒரு காலத்து இறங்கி வருவதற்கும் அத் தமிழே தேவைப்படும் என்பதை அறிதல் நன்று. இன்றேல், இடர்ப்பாடுறுவர். வயிற்றுப் பெருமான் பொருட்டு, வரட்டுப் பாடமோதிட பட்டங்கள் வாங்கிய(!) இத்தகைய இனங்கொல்லிகளைப் பற்றிச் சற்றுங் கவலையில்லை. ஏனெனில். தெளிந்த நல்லறிவு வெறும் பட்டங்களா:ல், அளக்கப் படுவதில்லையே!

தமிழினத்தை அடிமையிருளிலிருந்து விடுவித்து வாழவைக்க மடிதற்று நிற்கும் 'விடுதலை'யின் போக்கு விரும்பத் தக்கதன்று. சீரிளமைத் தமிழ்மொழிக்குக் கெடுதலை எண்ணும் போக்கினை அஃது உடனே விடுத்து அறியாமை இருளினின்றும், அயல்மொழிக் கலப்பினின்றும் முதலில் அது தன்னை மீட்கட்டும். பிறகு தமிழினத்தை மீட்க முயலட்டும். அற்றேல், விடுதலையின் பணி வெற்றுரவார வெறும்பணியென மதிப்பிடப்படும். தேர்தல் காலத்துச் சிலர்க்குப் பயன்படும்; அவ்வளவே. குமுகாய மறுமலர்ச்சிக்குரிய உறுதிப்பாடும், கடைப்பிடியும் மொழிக்காப்பும் நனி இன்றியமையாதன என்றறிந்து செயல்படின் விடுதலை எதிர்நோக்குந் தமிழகம் உருவாகும். இனியாகிலும் மனம்போன போக்கினை விட்டு, தமிழ்த் தூய்மை காக்குமாக; இன நலஞ் சேர்க்குமாக.

'திரவிட நாகரிகம் ஒரு கட்டுக் கதையன்று' கட்டுரை பழந் தமிழரின்-வரலாற்றிய மொழித்திறங்காண எழுதப்பட்ட அரியப்

கட்டுரை; நன்று. என்றாலும், கலைமகள் இதழில் ஓர் ஆரிய அரைக் கிறுக்கு, ‘ஆரியரும் திராவிடரும் இந்தியரே’ எனுந்தலைப்பில் கிறுக்கி யிருந்த வரிகள், ‘ஆரியர் திராவிடர் என்ற இனப்பிரிவினை தவறானது; இந்தியா முழுதும் ஒரே நாகரிகம் படர்ந்து நிலவியது.’ என்னே-அவ்வாரியக் கிறுக்கின் சிறுமதி’ அழகிய தமிழ் மகளின் திருவுடலில் தோன்றும் எத்தகைய-கலப்புக் கட்டிகளையும் தங்களது தெளிந்த நல்லறிவாலும், பட்டறிவாலும் சுட்டெரித்துத் தூய்மை செய்து தொடர்ந்து செல்க; தமிழால் வெல்க.

—**பெரு. தமிழ்வேந்தன்**. பவானிசாகர்.

*0:666:* பெருமதிப்பிற்குரிய ஐயாவுக்கு! இக்கால் பல தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் இன்றைய தமிழக அரசை வானளாவ புகழ் கின்றனர். மற்றும் பட்டம்பெற்ற ஆசிரியர்களும் அப்படியே. இவ்விரு கும்பல்களும் மேனாள் முதல்வரைப் பழித்துத் தூற்றித் தந்நலத்தை அடைந்து வருகின்றன. புதிதாக எவரும் கல்வித் துறையில் நுழைய இயலாதவாறு செய்ய வேண்டியவற்றைச் செய்து வருகின்றன. பணியில்லா ஆசிரியர்களைப் பற்றி எவனும் இந்த நாட்டில் கவலைப்பட வில்லை. அரசுப்பணியில் இருக்கும் அனைவரும் தாங்களே இந்நாட்டின் வரிப்பணத்தை விழுங்குவது என்று முடிவு செய்து விட்டனர். எனவேதான் உண்மையான பணியாளர்கள் இன்று அரசுப் பணியில் காண இயலவில்லை. மாந்த நல உணர்வு கடுகளவும் இன்றைய அமைச்சர் முதல் கடைநிலை ஊழியர் வரை எவர்க்கும் இல்லை. இப்படிப்பட்ட நாட்டில் எம்மைப் போன்றோரும் தங்களைப் போன் றோரும் பிழைக்கத் தெரியாதவர்கள் என்று பலர் கூறுவதைக் கேட்டு வெட்கப்பட வேண்டியுள்ளது.

இன்றைய கல்வியின் தரம் மிகவும் கீழாகவுள்ளது. இதற்குக் கரணியம் அந்தந்த துறையைச் சேர்ந்த திறமைமிக்க பலரை அத் துறைக்குப் பயன்படுத்தாது, வேற்றுத்துறை வீடணர்களைத் தொடர் பில்லாத் துறையில் பதவியில் அமர்த்துவது; வெற்றுணர்வாளர்களை மதிப்பது; பொருள் நிலையைச் சாக்குச் சொல்லி ஏமாற்றுவது; இடம் இல்லை என்று எக்காளமிடுவது; ஆசிரியப் பணிக்கு பணிக்கையில் கையூட்டு முறையைக் கையாள்வது; ஆளுங்கட்சிப் பெம்மான்களின் கழிசடைச் செயல்கள்; சோர்வுகளின் வெற்றியை அறிவின் மேம் பாடெனக் கொள்ளும் அறியாமை போன்ற இன்னும் பல.

பயிற்சி பெற்றுப் பலர் ஆசிரியராகப் பணிபெறாது இருக்க, பயிற்சியே பெறாது புதிதாகக் கல்லூரிப் படிப்பை முடித்து வருவோர்க்குப் பணியளிக்கின்றனர்; அகவையில் முதிர்ந்த பலரைப் புறக்கணித்துவிட்டு இப்படிப் போகும் அரசுக்கு எக்கேடு வந்து வாய்க்குமோ, இறைவா? பல்லாயிரவர் பயிற்சி பெற்றுப் பணியின்றி இருக்க அஞ்சல் வழியில் பயிற்சி அளிக்க அனுமதி வழங்கியுள்ள இந்த அரசும் ஓர் அரசா? ஏய்த்துப் பிழைப்பதே ‘அரசியல்’ என்பது இந்நாட்டு அரசியலார் அரசியலுக்கு வகுத்த இலக்கணமா? இரக்கம் என்பது அணு அளவுமின்றிக் கொடுஞ்செயல் புரிவோருக்குத்தான் இம்மண் உகந்ததோ? மனச்சான்றைப் புறந்தள்ளி ஆணவத்தாலும் அதிகாரச் செருக்காலும் அறமல்லாதவற்றை செய்பவர்களுக்குத்தான் இந்நாடு தாயகமோ? -**சி. நா. செந்தமிழ்ச்செல்வன்**, வேங்கைவாடி

**தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005 (தமிழகம்).**